வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 30.06.2025 திங்கட்கிழமை இதழ் : 181 பக்கங்கள் : 12

### அரியாலை மனிதப் புதைகுழி:

# நேற்று 5 மனித எச்சங்களுடன் புத்தகப் பையும் மீட்கப்பட்டது!

- த.பிரதீபன், பு.கஜிந்தன் -



யாழ்ப்பாணம், ஜூன் 30

**அரியாலை (செம்மணி அருகே) சித்துப்பாத்தி மனிதப் புதை குழியில் பை ஒன்றும் துணி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட பை புத்தகப் பை என்று நம்பப்படுகிறது. அங்கு தொடரும் அகழ்வில் இவ்வாறான பொருட்கள் வெளிப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். இதனிடையே, நேற்றைய தினம் அந்தப் பகுதியில் மேலும் 5 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.**

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடுகளில் சிறுவர்களுடையவையும் அடங்கும் என்றும் தெரிய வருகிறது.

அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்டமாக முன்னெடுக்கப்படும் அகழ்வாய்வில் நான்காவது நாளாக நேற்றும் அகழ்வு தொடர்ந்தது. இதன்போதே, மேலும் 5 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன.

இதனிடையே, நேற்றுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகளில் 33 மனித எலும்புக்கூடுகள் 11

## கச்சதீவு எமது இறைமை சொத்து எவராலும் மீளப்பறிக்க முடியாது!

### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், ஜூன் 30

"இலங்கைக்கு சொந்தமான கச்சத்தீவு இங்குள்ள இரண்டு கோடி மக்களின் இறைமையான சொத்தாகும். அதை எவராலும் மீளப்பறிக்க முடியாது", இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் கருத்து மற்றும் கச்சதீவை மீளப்பெறுவது குறித்து தமிழ்நாடு மீனவர்கள் நிறைவேற்றிய தீர்மானம் தொடர்பில் பதிலளிக்கும் விதமாகவே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அத்துடன், "இலங்கை கடல் எல்லைக்குள் சட்ட விரோதமாக நுழையும் இந்திய மீனவர்கள் நாட்டின் கடல் வளங்களை கடுமையாக அழித்து வருகின்றனர். வடக்கில் 30 சதவீதத்துக்கும் அதிகமானோர் மீன்பிடி தொழிலையே நம்பியுள்ளனர். அவர்களின் வாழ் வாதாரத்தை பாதுகாக்கத் தேவை யான அனைத்து நடவடிக்கை களும் எடுக்கப்படும்", என்றும் அவர் கூறினார். (ஐ)

## 3 வாரங்களில் ஓ.எல். பரீட்சை பெறுபேறுகள்

கொழும்பு, ஜூன் 30

க. பொ. த. சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் ஜூலை 3ஆம் வாரத்தில் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ. கே. எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான க. பொ. த. சாதாரண தரப் 11

## வடக்கு அபிவிருத்தி திட்டம் இணைப்பு குழு முன்மொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 30

உலக வங்கியால் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளின் தொடர் நடவடிக்கைக்காக இணைப்பு குழு ஒன்று முன்மொழியப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. 11

## ஷிரந்தி கைதாவதை தடுக்க மகாநாயக்கரை நாடிய மகிந்த

### ஆனால் அவரும் கைவிரித்தாராம்!

கொழும்பு, ஜூன் 30

தனது மனைவி ஷிரந்தி கைது செய்யப்படுவதை தடுக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மல்வத்து மகாநாயக்க தேரரை நாடினார் என்றும் ஆனால், அவர் இதில் தலையிட மறுத்துவிட்டார் என்றும் தென்னிலங்கை ஊடகங்கள் 11

## அலை தாக்கியதில் படகு கவிழ்ந்ததில் ஒருவர் பலி!

### நாகர்கோவிலில் நேற்று துயரம்

வடமராட்சி, ஜூன் 30

அலையின் தாக்கத்தால் மீனவர் மீது படகு கவிழ்ந்த அனர்த்தத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 11

## தென்னிலங்கை படகு விபத்துகள் ஐவரின் உடல்கள் மீட்கப்பட்டன!

கொழும்பு, ஜூன் 30

தென்னிலங்கையில் இடம்பெற்ற 4 படகு விபத்துகளில் காணாமல் போயிருந்த 5 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

தென்னிலங்கையின் காலியின் தேவேந்திரமுனை, ஹிக்கடுவை, அம்பாந்தோட்டையின் தங்காலை, களுத் துறை - பேருவளை பகுதிகளில் நேற்று 11

## சித்துப்பாத்தி மயான மண் மாதிரிகள் பரிசோதனை!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூன் 30

அரியாலை - சித்துப்பாத்தி மயானத்தின் மண்ணின் மாதிரிகளை பரிசோதனை செய்யும் நடவடிக்கையில் கொழும்பிலிருந்து வந்த குழு ஈடுபட்டுள்ளது.

இந்தக் குழு நேற்றைய தினம் அந்த இடத்துக்கு சென்று மண்ணைப் பெற்று பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இந்தப் பகுதியின் மண்ணை பகுப்பாய்வுக்கு உட்படுத்தக் கோரி சட்ட மருத்துவ அதிகாரி 11

## போதை ஊசியால் பறிபோனது உயிர்!

யாழ்ப்பாணம், ஜூன் 30

சுமார் 5 மாதங்களாக ஊசி மூலம் போதைப் பொருளை உடலில் செலுத்தி வந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

புன்னாலைக்கட்டுவனை சேர்ந்த 28 வயதான இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர், கடந்த 5 மாதங்களாக ஊசி மூலம் 11

### யாழ். மாநகர வாகனங்களை தடுத்து

## கல்லுண்டாய் வெளியில் மக்கள் நேற்று போராட்டம்!

- த.பிரதீபன், பு.கஜிந்தன் -



யாழ்ப்பாணம், ஜூன் 30

கல்லுண்டாய்வெளி குப்பை மேட்டில் கழிவுகளை கொட்ட வந்த யாழ். மாநகர சபையின் வாகனங்களை வழிமறித்து அந்தப் பகுதி மக்களும் மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர்களும் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். மாநகர சபை தனது எல்லைக்குள் சேகரிக்கும் சகல கழிவுகளையும் மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட கல்லுண்டாய்வெளியில் கொட்டி வருகிறது. இதனால், அந்தப் பகுதி 11

### கல்லுண்டாய் வெளியில்

## அபாயகரமான விதத்தில் மருத்துவ கழிவுகளும்!

- பு.கஜிந்தன் -



யாழ்ப்பாணம், ஜூன் 30

கல்லுண்டாய்வெளி குப்பை மேட்டில் மருத்துவ கழிவுகளும் ஆபத்தான விதத்தில் கொட்டப்பட்டுள்ளன என்பது தெரிய வந்துள்ளது.

கல்லுண்டாய்வெளியில் யாழ். மாநகர சபை குப்பைகளை கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றைய தினம் அந்தப் பகுதி மக்களும் மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் யாழ். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி படுகொலை சூத்திரதாரிகள் இன்னமும் இராணுவ உயர் பதவிகளில்!

## விசாரணைக்கு வலியுறுத்துகிறது மக்கள் போராட்ட முன்னணி!

கொழும்பு, ஜூன் 30

**கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வன்புணர்வு மற்றும் படுகொலை குற்றவாளி சோமரத்ன ராஜபக்ஷவின் வாக்குமூலத்தில் செம்மணி படுகொலைகளுக்கு காரணமானவர்கள் என குறிப்பிட்ட இராணுவ அதிகாரிகளில் பலர் இன்னமும் உயர்பதவிகளை வகிக்கின்றனர். இவர்களுக்கு எதிராக உடனடியாக விசாரணைகளை நடத்த வேண்டும் என்று மக்கள் போராட்ட முன்னணியின் ராஜ்குமார் ரஜீவ்காந் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

நாட்டில் இன்று பேசுபொருளாக இருக்கின்ற விடயம் செம்மணி படுகொலைகள் மற்றும் அதன் அகழ்வு பணிகள். உங்களுக்குத் தெரியும் 1996ஆம் ஆண்டு கிருஷாந்தி குமாரசுவாமி என்கின்ற மாணவி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். அத்துடன், அவரின் குடும்பத்தவர்கள் அயல்வீட்டுக்காரர் எனப் பலர் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ச நேரடியாக சாட்சியம் வழங்கினார்.

இந்த கொலைகளுக்காக தண்டனை வழங்கப்பட்ட பின்னர் அந்த குற்றவாளி, நேரடியாக இராணுவ தரப்பை நோக்கி குற்றஞ்சுமத்தினார். இதேபோல, 500 முதல் 600 வரையிலான நபர்களை நாங்கள் இங்கே கொன்று புதைத்திருக்கிறோம் , இதனை செய்யுமாறு எங்களுக்கு அன்று கூறியவர்கள் அன்று அந்த இடத்திலிருந்த உயர் அதிகாரிகள் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே, இவர்களின் கைதுகளின் பின்னர் அந்த உயரதிகாரிகள் தொடர்பில் எந்த விசாரணையும் இடம்பெறவில்லை. அன்று அங்கு கடமையாற்றியவர்கள் இருந்தவர்கள் எல்லாம் இன்றும் இராணுவத்தில் இருக்கிறார்கள். சிலர் இராணுவத்தின் பெரிய பதவிகளை பெற்றிருக்கிறார்கள். அவ்வேளை பொறுப்பதிகாரிகள் தரத்தில் இருந்தவர்கள் தொடர்ந்தும் அப்படியே இருக்கின்றனர்.

அன்று இலங்கையின் முப்படை தளபதியாகயிருந்த சந்திரிகா குமாரதுங்க இன்றும் இங்கு நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். எனவே, இவற்றுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் மேல் உடனடியாக தீவிரமான விசாரணை நடத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் - என்றார். (ஐ)



# நரசிங்கர் ஆலய பொங்கல் விழா வெகுவிமர்சையாக நடைபெற்றது!

வவுனியா, ஜூன் 30

வவுனியா - பூந்தோட்டம் லக்ஷ்மி சமேத நரசிங்கர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் பெருவிழா ஆயிரக்கணக்கான மக்கள் புடைசூழ நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஆலயத்தின் பொங்கல் விழா முதலில் வீதியுலாவுடன் ஆரம்பமானது. பக்தர்கள் பலரும் காவடி, பாற்குடம் எடுத்து ஊர்வலமாக ஆலயத்தை வந்தடைந்தனர். இதன்போது, மயிலாட்டம், பொய்க்கால் குதிரை, செண்டைமேளம், யானை ஊர்வலம் போன்றவையும் நிகழந்தன.

அத்துடன், பறவைக்காவடி, தூக்குக்காவடி என பல காவடிகளையும் பக்தர்கள் எடுத்து வந்தனர். பல ஆயிரக்கணக்கானவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக இந்த பொங்கல்விழா நடைபெற்றது. (ஐ)

# கல்லுண்டாய்வெளி குப்பை போடுமிடத்தில் தீ பரவல்!





யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கட்டுப்பாட்டிலுள்ள கல்லுண்டாய் வெளி குப்பை கொட்டும் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பெருந்தீ விபத்து ஏற்பட்டது.

யாழ். மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்படுத்த பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். எனினும், நீண்டபோராட்டத்தின் பின்னர் தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்தத் தீ விபத்தால் அதன் அயல் பிரதேச மக்கள் மூச்சு விடுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். இதனால், பலர் அந்தப் பகுதியிலிருந்த வெளியேறி உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்திருந்தனர்.

(ஐ)

# யாழ். பல்கலைக்கழக சட்டத்துறையின் 20 வருட பூர்த்தியையொட்டி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் சட்ட கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டு 20 ஆண்டுகள் பூர்த்தியையொட்டி பல்கலைக்கழக சட்டத்துறையின் ஏற்பாட்டில் நேற்று விசேட நிகழ்வு நடைபெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் நீதிமன்ற நீதிபதி ஏ. எச். எம். டி. நவாஸ், கௌரவ விருந்தினராக சட்டத்தரணி மாலா சபாரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை தொடர்பான ஆவணப்படமொன்று வெளியிடப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி நிஷாந்தவின் நெறியாள்கையில் நடைபெற்ற குழு விவதாத்தில் இலங்கை சட்டக் கல்லூரி அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பிரசாந்தலால் டி அல்வீஸ், சட்டத்தரணி எல். இளங்கோவன், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து,



சட்டத்தரணி எர்மிசா டெகல், சட்டத்தரணி லக்ஷ்மணன் ஜெயகுமார் ஆகியோர் நேரடியாக பங்கேற்றதுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய இணைய வழியில் இணைந்தார்.

இதன்போது யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், யாழ். மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கோசலை மதன், நீதிபதிகள், சட்டத்தரணிகள், பேராசிரி யர்கள், விரிவுரையாளர்கள், சட்டத்துறை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ஐ)

# யாழ். புகையிரத நிலையத்தை அமைச்சர் பிமல் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், ஜூன் 30

போக்குவரத்து, நெடுஞ் சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்றைய தினம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை பார்வையிட்டார்.

இதன்போது கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் ஆகியோரும் அவருடன் உடனிருந்தனர். (ஐ)

# கசிப்புடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 30

25 லீற்றர் கசிப்புடன் 19 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஏழாலை பகுதியில் வைத்து குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

# யாழ். மத்திய கல்லூரியில் தமிழ் மொழிதின விழா!

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். மத்திய கல்லூரியின் தமிழ் மன்றம் நடத்தும் தமிழ் மொழி தின விழா எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சோ. சிறீ. சந்தோஷ்சர்மா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர் திருமதி சி. எஸ். ஆர். செல்வகுணாளன் முதன்மை வகிப்பார். பிரதமி விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ. குமரன், சிறப்பு அதிதியாக யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் க. கலாறெஜி ஆகியோர் பங்கேற்பர்.

(ஐ)

# ஹெரோயினுடன் இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 30

ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 80 மில்லிகிராம், 100 மில்லிக்கிராம் ஹெரோயினுடன் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதான இருவரையும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள, பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
30.06.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# நேர்மையாக விடயங்களை ஆராயுங்கள்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் இலங்கை வருகையும் அவர் இலங்கையில் வைத்துத் தெரிவித்திருக்கும் கருத்துகளும் இதுவரையான தமிழ்த் தேசிய அரசியல் உரையாடல்களில் பெரும் உடைவை ஏற்படுத்தியிருக்கிறது. அதாவது. யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையில் ஆணையாளரின் கருத்துகள் புலம்பெயர் தமிழ் 'லொபி' யின் தோல்வியை பறைசாற்றியிருக்கிறது.

புலம்பெயர் சூழலிலுள்ள பல அமைப்புகள் இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லவுள்ளதாகக் கதைகளை சொல்லிக் கொண்டிருக்கும்போது ஆணையாளர் வோல்கர் டர்க்கோ ஜனாதிபதி அநுர குமாரவுடனான சந்திப்பின்போது உள்ளக பொறிமுறையை வலியுறுத்தினார் என்று குறிப்பிட்டிருப்பது இதுவரையான அனைத்து சர்வதேச அழுத்தக் கதைகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதேவேளை அரசாங்கத்தோடு இணைந்துதான் பிரச்னைகளை தீர்க்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருப்பதும் சுயாதீன சர்வதேச விசாரணைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு என்பது ஒரு முடிந்துபோன கதையா என்னும் கேள்வியையும் முன்வைக்கிறது.

புல்பெயர் சூழலிலுள்ள பல அமைப்புகள் சர்வதேச அரசியல் சூழலில் பலவாறான லொபி செயல்பாடுகளை முன்னெடுத்து வந்ததாகக் கூறி வந்திருக்கின்றன. குறிப்பாக பிரித்தானிய தமிழர் பேரவை. அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கிவரும் பேர்ள் மற்றும் தமிழர் அமெரிக்க அரசியல் பேரவை அத்துடன். இன்னும் பல அமைப்புகளாகத் தங்களை அடையாளப்படுத்தியவர்கள் என ஒரு தொகையினர் இவ்வாறான லொபி செயல்பாடுகளில் தங்களை ஈடுபடுத்தி வந்திருக்கின்றனர்.

மறுபுறமாக லொபி செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தங்களில் யார் சரியானவர்கள் என்னும் அடிப்படையில் மோதியும் கொண்டனர். வருடந்தோறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வுகளுக்கு சென்று அங்கு பக்க நிகழ்வுகளில் உரையாற்றினர். புலம்பெயர் அமைப்புகளின் அழைப்பின் பெயரில் தமிழ் அரசியல்வாதிகளும் அவ்வப்போது பக்க அமர்வுகளில் பங்குகொண்டு ஒரு பிரதான அரசியல் பணியை செய்துவிட்ட திருப்தியோடு திரும்பியிருக்கின்றனர். இத்தனைக்குப் பிறகும் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இலங்கை வருகையின்போது தெரிவித்திருக்கும் கருத்துகளோ இவ்வாறான செயல்பாடுகளின் பெறுமதியை பூச்சியமாக்கியிருக்கிறது.

இது யாருடைய பிழை? மனித உரிமைகள் பேரவையின் பிழையா அல்லது மனித உரிமைகள் பேரவையை சரியாகப் புரிந்து கொள்ளாமல் தான் தோன்றித்தனமாக செயல்பட்டவர்களின் பிழையா? இந்த விடயம் தொடர்பில் ஒரு பொறுப்புள்ள ஊடகம் என்னும் வகையில் ஈழநாடு தொடர்ந்தும் உண்மைகளைப் பதிவு செய்து வந்திருப்பதுடன். போலியான செயல்பாடுகள் இருக்கும் வாய்ப்புகளையும் அகற்றும் என்பதையும் நாம் சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம்.

ஆரம்ப காலங்களில் இயக்கங்களிடையே எவ்வாறு போட்டி மனப்பான்மை மேலாங்கி இறுதியில் ஒருவரை ஒருவர் ஆயுத வழியில் எதிர்கொள்ளும் நிலைமை உருவாகியதோ அப்படியான சூழல்தான் யுத்தத்துக்குப் பின்னரான அரசியல் சூழலிலும் காணப்பட்டது. இங்கு ஆயுதங்கள் இல்லை என்பது மட்டும்தான் ஒரேயொரு வேறுபாடு. இதற்கு களத்திலிருந்து தலைமை தாங்க வேண்டிய அனைத்தையும் ஒழுங்குபடுத்த வேண்டிய பொறுப்புள்ள கட்சிகள் தங்களுக்குள் மோதிக் கொண்டதும் ஒவ்வொருவரும் தங்களுக்கான ஆதரவுத் தளங்களை புலம்பெயர் சூழலில் உருவாக்கிக்கொள்ள முயன்றதுமே அனைத்து சீரழிவுகளுக்கும் பிரதான காரணமாகும்.

களத்திலிருந்த கட்சிகள் விடயங்களை கையாளுவதில் ஓர் ஐக்கிய முன்னணியாக தொழில்படாமையால் புலம்பெயர் சூழலில் தடியெடுத்தவர் எல்லாம் தண்டல்காரர்கள் என்பதுபோல். பலர் தங்களை ஈழத் தமிழ் மக்களின் ஆபத்பாந்தவர்களாகக் காண்பித்துக் கொள்ளும் சூழல் உருவாகியது. இதன் விளைவுதான் ஈழத் தமிழர் விவகாரம் இலங்கையின் ஆட்சியாளர்களின் பண்பையும் செயல்பாடுகளையும் வைத்து நோக்கப்படும் நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. கடும்போக்கான அரசாங்கங்கள் இருக்கின்றபோது ஆணையாளரின் அறிக்கை சற்று காட்டமாக இருப்பதும் பின்னர். ஆட்சி மாற்றங்கள் ஏற்படுகின்றபோது அரசாங்கத்தோடு இணைந்து பயணிக்க வேண்டும் என்பதாகவும் மாறுகின்றது. அறிக்கை சற்றுக் காட்டமாக இருக்கின்றபோது புளகாங்கிதம் அடைவதாகவும் அறிக்கை காரம் குறைந்ததாக மாறுகின்றபோது தலையைக் குனிவதாகவும் தமிழர் அரசியல் அதன் கையறுநிலையை காண்பிக்கிறது. எதுவரையில் இப்படிச் செல்வது?

# அல்லைப்பிட்டியிலுள்ள ஓய்வு விடுதியை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவும்

## அரசாங்க அதிபர் பிரதீபன் வலியுறுத்தல்

*யாழ்ப்பாணம், ஜூன் 30*

அல்லைப்பிட்டியில் உள்ள பொது நிர்வாக அமைச்சுக்குரிய ஓய்வு விடுதியை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் உள்ள சுற்றுலா விடுதிகள் மற்றும் மாவட்ட, பிரதேச செயலகங்களுக்கு முன்மொழியப்பட்ட பழுதுபார்ப்பு மற்றும் மேம்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் கடந்த 27 ஆம் திகதி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், கடந்த வாரம் இடம்பெற்ற அரசாங்க அதிபர்களுக்கான மாநாட்டில் குறித்த பிரச்னை தொடர்பில் கோரிக்கை முன்வைத்ததாகவும், ஒருவார காலத்துக்குள் அமைச்சின் அதிகாரிகள் நேரடியாக களவிஜயம் மேற்கொண்டு அரசாங்க ஓய்வு விடுதிகள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக முன்மொழியப்பட்ட மேம்பாட்டு வேலைத் திட்டங்கள் தொடர்பில் செயல்பாடுகளை முன்னெடுத்தமைக்கு நன்றிகளை தெரிவித்தார்.

மேலும், அரசாங்க ஓய்வு விடுதிகளில் மேலதிகமாக தங்குமிட வசதிகள் மற்றும் குடிதண்ணீர் தாங்கி வசதி மற்றும் பிற தேவைகளுக்கான நீர் தேவைப்பாடுகள் உள்ளதாகவும் தெரிவித்துடன், அல்லைப்பிட்டியில் உள்ள பொது நிர்வாக அமைச்சுக்குரிய ஓய்வு விடுதி நீண்ட காலமாக செயல்படாமல் உள்ளதாகவும், சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு அதனை வழங்கலாம் எனவும் கூறினார். எனவே, அல்லைப்பிட்டி ஓய்வு விடுதியை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்க அதிபர் வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பொறியியற் பிரிவு பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) பொறியியலாளர் யூ.எல்.ஏ. நசார் கருத்து தெரிவிக்கையில், இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் கோரிக்கைகளை அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி விரைவாக தீர்வை பெற்றுக் கொள்ள வழிவகை செய்வதாக கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சின் பொறியியற் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) பொறியியலாளர் எல். சந்திரசிறி, அமைச்சின் பொறியியற் பிரிவு கட்டட கலைஞர்கள், உயரதிகாரிகள், மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர்,

பிரதம கணக்காளர், மாவட்ட மற்றும் பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், மாவட்ட செயலக பொறியியற்பிரிவு உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (எ)

## முல்லை. புதுக்குடியிருப்பில்

# போதைப்பொருட்களுடன் யுவதி உட்பட இருவர் கைது

*முல்லைத்தீவு, ஜூன் 30*

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு - கைவேலிப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து விற்பனைக்காக கொண்டு செல்லப்பட்ட போதைப்பொருட்களுடன் யுவதி உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

550 கிராம் கஞ்சா, 160 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருட்களுடன் இளைஞனும் யுவதியும் நேற்று முன்தினம் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - இளவாலையை சேர்ந்த 23 வயது இளைஞனும் யுவதியும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# வவுனியாவிலிருந்து மூதூர் சென்ற வாகனம் மின்கம்பத்தில் மோதியது



*வவுனியா, ஜூன் 30*

வவுனியாவிலிருந்து மூதூர் நோக்கிப் பயணித்த பட்டா ரக வாகனம் திருகோணமலை - அநுராதபுரம் வீதியின் வெல்வேரியை அண்மித்த பகுதியில் பாதையை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.


இதில் மின்கம்பமும் சேதமாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் சாரதி சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் - 30 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 16
நல்ல நேரம்: 10.30 - 12.00
ராகு காலம்: 7.30 - 9.00
திதி: சஷ்டி




**மேடம்**
குடும்பத்துடன் உங்கள் நேரத்தை செலவழிப்பீர்கள். உங்களை சுற்றி உள்ளவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். அன்புத் தொல்லை குறையும். நன்மை நடக்கும் நாள்.

**இடபம்**
தடைகளை கண்டு தளர மாட்டீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். புது வேலை கிடைக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வாகன வசதிப் பெருகும்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளி யூரிலிருந்து நல்ல செய்தி வரும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். புதிதாக ஆடை ஆபரணம் வாங்குவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப் பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டு விட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். தேவைப்படும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் குறுக்கே நிற்காதீர்கள். வாகனத்தில் கவனம் தேவை.

**துலாம்**
உங்களுடைய ஆலோச னைகள் எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். திடீரென்று அறிமுகமாகும் நபரால் பயனடைவீர்கள்.

**விருட்சிகம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**தனுசு**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம்பிக்கை குறையும். உறவினர் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**கும்பம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்குப் பிடித்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள். மனைவிவழி உறவினர்கள் மதிப்பார்கள்.

**மீனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும்.

# கல்லுண்டாய் குப்பை மேட்டால் சுகாதார பாதிப்புகள் அதிகரிப்பு

## இளங்குமரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

கல்லுண்டாய் வெளியில் அமைந்துள்ள யாழ். மாநகர சபையின் குப்பை மேட்டில் தொடர்ச்சியாக தீ விபத்து ஏற்பட்டு வருவதனால் சுகாதார பாதிப்பு ஏற்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் தெரிவித்தார்.

அத்தோடு, குப்பைகளை உரிய முறையில் சேகரித்து, வகைப்படுத்தி, மறுசுழற்சி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் வெளிப் பகுதியில் அமைந்துள்ள குப்பை மேட் டில் நேற்று முன் தினம் இரவு திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டிருந்தது.

தகவல் அறிந்து உடனடியாக அப்பகுதிக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் உள்ளிட்ட குழுவினர், நிலைமையை பார்வையிட்டு ஆராய்ந்துள்ளனர்.

இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில், தீயணைப்பு பௌசர்கள் பற்றாக்குறை காரணமாக தீயை கட்டுப்படுத்துவதில் பெரும் சிரமம் ஏற்பட்டிருந்தது.

யாழ். மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் ஒன்று மட்டுமே முறையாக இயங்குவதாகவும், ஏனைய இரண்டும் பழுதடைந்து இயங்க முடியாத நிலையில் காணப்படுவதாகவும், இதனாலேயே குறித்த ஒரு பௌசரின் உதவியோடு நீர் விசிறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போதும் தீயை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத சூழ்நிலை காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

குப்பை மேடு எரிவதால் ஏற்படும் புகை மற்றும் தீயினால், அப்பகுதி மக்களுக்கு சுகாதார பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இதைத் தடுக்கவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், குப்பைகளை முறையாக அகற்றி, எரிவதைத் தடுக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். குப்பை எரிவதால் வெளிவரும் நச்சு வாயுக்கள் சுற்றுச்சூழலை மாசுபடுத்துகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள், குப்பை மேடுகளை கண்காணிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கவும் வேண்டும்- என்றார். (எ)

# யோகாசன பயிற்சி நிறைவு பரிசளிப்பு விழா





முல்லைத்தீவு, ஜூன் 30

முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த பெல்ஜியம் நாட்டில் வசிக்கும் யோகா பயிற்சி ஆசிரியர் அல்பிரட் விக்டர் டலஸ், பத்து நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இணையத் தளம் ஊடாக யோகா பயிற்சியை நடத்தி வருகிறார்.

இந்த நிலையில், முல்லைத்தீவிலிருந்து பயிற்சி பெற்ற மாணவி ஜே. ருபேன்ஷா, ஓர் ஆண்டை பூர்த்தி செய்த நிலையில் குறித்த மாணவிக்கான பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் ரெஜிஸ் விமலேந்திரன் உள்ளிட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

(எ)

# கலை - கலாசார - பண்பாடுகளை வளர்க்க சகலரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்

## யாழ். அரசாங்க அதிபர் பிரதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

கலை கலாசார பண்பாடுகளை பேணவதற்கும் மேன்மேலும் வளர்ப்பதற்கும் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட பண்பாட்டு பேரவையின் ஆண்டுப் பொதுக் கூட்டம் அரசாங்க அதிபரும் பண்பாட்டு பேரவையின் தலைவருமான பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், பெருந்திரளாக கலைஞர் வருகை தந்தமையையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாகவும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்கு குறைந்தளவான கலைஞர்களே வருகை தந்தமையால், இப் பொதுக் கூட்டத்துக்கு கூடியளவு கலைஞர்கள் வருகை தருவதனை கலாசார உத்தியோகத்தர்கள் ஊக்கப்படுத்த வேண்டும் என தாம் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்தார். மேலும் எமது யாழ்ப்பாணம் மாவட்டம் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை பேணும் மாவட்டம் எனவும், கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். அடுத்த சந்ததிக்கு எமது கலைகள், கலாசாரங்கள் எடுத்துச் செல்லப்பட வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு எனவும் தெரிவித்தார். மேலும், புலம்பெயர் தேசங்களில் எம்மவரால் கலைகள் சிறப்பான முறையில் வளர்க்கப்பட்டு வருவதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். அவர்களுடன் இணைந்து நிதி உதவிகளைப் பெற்று கிராமிய ரீதியாக கலை நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும், ஆண்டுக்கு ஒரு தடவை நடக்கும் பண்பாட்டுப் பெரு விழாவுடன் எமது செயல்பாடுகள் நின்றுவிடாது கலைகளை வளர்ப்பதற்கு உரிய ஆரோக்கியமான ஆலோசனைகளை எமக்கு கலைஞர்கள் வழங்கி எம்மையும் ஊக்கப்படுத்தி எமது கலை கலாசார பண்பாடுகளை பேணவதற்கும் மேன்மேலும் வளர்ப்பதற்கும் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் எனவும் கூறினார்.

இப் பொதுக் கூட்டத்தில் ஆண்டுப் பொதுக்கூட்ட அறிக்கை மற்றும் கணக்கறிக்கை என்பன வாசிக்கப்பட்டு அங்கத்தவர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட பண்பாட்டுப் பேரவையின் தலைவராக பதவி வழியாக அரசாங்க அதிபரும் செயலாளராக மாவட்ட கலாசார உத்தியோகத்தரும் மற்றும் நிர்வாக சபையில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் கலாசார உத்தியோகத்தர்களும் செயல்படுவார்கள். ஏனைய பதவிகளுக்கான தெரிவுகள் நடைபெற்றன. அந்த வகையில், உப தலைவராக பேராசிரியர் என். சண்முகலிங்கன், உப செயலாளராக கே. தேவானந், பொருளாராக செ. மகேஷ் மற்றும் 15 நிர்வாக சபை உறுப்பினர்களாக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக ஒரு கலைஞரும் தெரிவு செய்யப்பட்டனர். இப் பொதுக் கூட்டத்தில் 35 பேரைக்கொண்ட புதிய நிர்வாக சபையானது யாப்பின் பிரகாரம் இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக செயல்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நிச்சயம் நீதி வழங்கப்படும்!

## பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர்



கொழும்பு, ஜுன் 30

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொறுப்புடன் இடம்பெற்று வருகின்றன. இது விடயத்தில் நிச்சயம் நீதி பெற்றுக் கொடுக்கப்படும்." - என்று உறுதியளித்துள்ளார் பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல.

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த விசாரணைகளில் சி. ஐ. டியினர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தினரும் கூட்டாக செயல்பட்டுவருகின்றனர்.

பிரதான சூத்திரதாரி யார் என்பது உள்ளிட்ட விடயங்கள் பற்றி சி. ஐ. டி. விசாரித்து வருகின்றது. பிரதான சூத்திரதாரிகளை மட்டுமல் அல்ல பொறுப்புக் கூறவேண்டியவர்களை நிச்சயம் நாம் நீதியின் முன் நிறுத்துவோம்.

பேராயரின் கவலை நியாயமானது. அவரின் கருத்துகளுக்கு நாம் மதிப்பளிக்கிறோம். எமக்கும் காலம் அவசியம். எது எப்படி இருந்தாலும் நிச்சயம் பொறுப்பு நிறைவேற்றப்படும்."- என்றும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதேசமயம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் தொடர்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அண்மையில் விசனம் வெளியிட்டிருந்தார். அவருக்கு பதிலளிக்கும் விதமாகவே பிரதி அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போதை வர்த்தகத்தில் ஈடுபட்ட இருவரின் சொத்துகள் முடக்கம்!

கொழும்பு, ஜுன் 30

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டனர் என்று சந்தேகிக்கப்படும் ஆணும் பெண்ணுமாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், இவர்களுக்கு சொந்தமானது என்று கருதப்படும் பல கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன.

கொழும்பு 8, பொரளை பகுதியை சேர்ந்த 43, 45 வயதுடைய இருவரே நேற்று முன்தினம் இவ்வாறுகைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், போதைப்பொருள் வர்த்தகம் மூலமாக சம்பாதித்ததாகக் கூறப்படும் கம்பஹா - கந்தானையில் 4 மாடி வீடு ஒன்று, கொழும்பு 08, பொர ளையில் 2 அடுக்கு மாடி வீடு கள் இரண்டு, கொழும்பு 08, பொரளையில் 3 மாடி வீடு ஒன்று, ஜப்பானிய ஆல்டோ வாகனம் ஒன்று, வேகன் ஆர் வாகனம் ஒன்று ஆகிய சொத் துகளே இவ்வாறு முடக்கப்பட் டுள்ளன.

சந்தேக நபர்கள் நேற்று முன் தினம்மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டமையை தொடர்ந்து எதிர்வரும் ஜுலை 11ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ளனர்.

ஊழல், மோசடி குற்றச்சாட்டு:

# 18 அரச உயரதிகாரிகள் தொடர்பில் விசாரணை!

கொழும்பு, ஜுன் 30

பல்வேறு ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அமைச்சு செயலாளர்கள் உட்பட 18 அரச உயரதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகளை இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை ஆகியவை நடத்துகின்றன.

ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான ஐந்து அரச அதிகாரிகள் தற்போது வெளிநாட்டில் இருக்கின்றனர் என்று கூறப்படுகிறது. தேவைப்பட்டால் இந்த அதிகாரிகளை நாட்டுக்கு அழைத்து வரவோ அல்லது கைது செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊழல் மற்றும் முறைகேடுகளை செய்வதற்கு அரசியல்வாதிகளுக்கு உதவினர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இந்த பொது அதிகாரிகள் அந்த முறைகேடுகளால் பயனடைந்தனர் என்று விசாரணைக் குழுக்கள் கூறுகின்றன.

பல அதிகாரிகள் பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலம், வாகனங்கள், பிற சொத்துகளை வாங்கியமை பற்றிய தகவல்களும் வெளியாகியுள்ளன. புலனாய்வுக் குழுக்கள் தற்போது இந்த அதிகாரிகளின் வங்கி கணக்குகளை ஆய்வு செய்து வருகின்றன.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளரின் சொத்துகள் குறித்தும் லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு விசாரணையை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

ஊழல் குற்றச்சாட்டு

# 5 மாதங்களில் மாத்திரம் 31 அரச அதிகாரிகள் கைது!

கொழும்பு, ஜுன் 30

நடப்பாண்டில் 5 மாதங்களில் இலஞ்ச ஊழல் தொடர்பாக பல்வேறு நிலைகளை சேர்ந்த 31 அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட 31 பேரில் 8 பேர் பொலிஸ் திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிகளாவர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பொலிஸ் பரிசோதகர், பிரதி பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் சார்ஜன்ட்கள் நால்வர், கான்ஸ்டபிள்கள் இருவர், பாடசாலை அதிபர் ஒருவர், பொது சுகாதார ஆய்வாளர்கள் இருவர் ஆகியோர் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

களுத்துறை படகு விபத்து:

# மாயமான மீனவர்கள் இருவரின் சடலங்களும் கரையொதுங்கின



கொழும்பு, ஜுன் 30

மீன்பிடி படகு கவிழ்ந்ததில், காணாமல் போயிருந்த மீனவர்கள் இருவரின் சடலங்கள் கரையொதுங்கின.

களுத்துறை பெந்தோட்டை கடற்கரையிலேய இந்த சடலங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை கரையொதுங்கிய நிலையில் கண்டறியப்பட்டன.

களுத்துறை, பேருவளை, மொரகல்ல பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மீன்பிடிக்கச் சென்றிருந்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் மீனவர்கள் இருவர் காணாமல் போயிருந்தனர்.

இந்த நிலையில் காணாமல் போன இருவரின் சடலங்களும் நேற்று மீட்கப்பட்டன. இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் அளுத்கம பகுதியை சேர்ந்த நதுன் குமார, அவரின்சகோதரர் துமிந்த நதுன் குமார என அடையாளம் காணப்பட்டுள்ளன. (ஐ)

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் கட்டண திருத்தத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஜுன் 30

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் கட்டண திருத்தத்துக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உருவாக்குநர்களின் கூட்டமைப்பு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எரிசக்தி எதிர்காலத்துக்கு நாம் ஒரு முக்கியமான கட்டத்தில் இருக்கிறோம். அதிகாரிகளின் சமீபத்திய நடவடிக்கைகள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சியில் பல ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை சீர்குலைத்து, கடுமையான பொருளாதார, சமூக விளைவுகளுடன் நமது தொழில் துறையை நிச்சயமற்ற எதிர்காலத்துக்குத் தள்ள முயற்சிக்கின்றன.

மின்சார கொள்முதல் விலைகளில் ஏற்பட்டுள்ள கடுமையான குறைப்பு, தொழில்துறையின் ஸ்திரத்தன்மையை சேதப்படுத்துகிறது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கட்டணங்களுக்கான திருத்தப்பட்ட ஊட்ட கட்டணங்களை அறிமுகப்படுத்தும் சமீபத்திய அமைச்சரவை அறிக்கை தொழில்துறை முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டாளர்கள் கூட்டமைப்பு, சில கட்டணங்கள் 30 சதவீதத்துக்கும் அதிகமாக குறைக்கப்பட்டுள்ளன என்று ஆழ்ந்த கவலையுடன் குறிப்பிடுகிறது. இந்த ஒருதலைப்பட்ச முடிவு பரவலான சந்தேகத்தை உருவாக்கியுள்ளது.

மேலும் வேலை இழப்புகள் குறித்த அச்சங்கள் ஏற்கனவே எழுப்பப்பட்டுள்ளன.

இது முதலீட்டாளர்களின் நம்பிக் கையை கடுமையாக பாதித்துள் ளது மற்றும் நாட்டின் மின் இணைப்புடன் இணைக்கப் பட்ட சூரிய சக்தி துறையின் எதிர்கால நம்பகத்தன்மை யின்மீது இருண்ட நிழலை போட்டுள்ளது - என்றார். (ஐ)

# இஸ்ரேலுக்கான மறுநுழைவு வீசா காலம் நீடிப்பு

கொழும்பு, ஜுன் 30

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலையால் நாட்டை வந்தடைந்த இஸ்ரேல் பயணிகளின் வீசாவை நீடிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று வெளியுறவு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில்,

இஸ்ரேலின் மக்கள் தொகை மற்றும் குடிவரவு ஆணையகம் இஸ்ரேலில் உள்ள தங்கள் சொந்த வேலை வாய்ப்புகளுக்குத் திரும்பும் நம்பிக்கையுடன் மறு நுழைவு வீசாவுடன் இலங்கைக்கு வந்தவர்களின் மறு நுழைவு வீசாவின் செல்லுபடியாகும் காலத்தை ஜுலை 31 வரை நீட்டிக்க முடிவு செய்துள்ளது.

இதன்படி,

இஸ்ரேலுக்கான சர்வதேச விமானங்கள் தற்போது தொடங்கியுள் ளதால், மறு நுழைவு வீசா வில் நாட்டுக்கு வந்தவர்கள் மறு நுழைவு வீசா காலாவதியான பிறகும் ஜுலை 31வரை இஸ்ரேலில் வேலைக் குத் திரும்புவதற்கான வாய்ப்பு உள்ளது.

இது தொடர்பாக அனைத்து தொடர்புடைய நிறுவனங் களுக்கும் தெரிவிக்கப்பட் டுள்ளது - என்றுள்ளது. (ஐ)

# கணேமுல்லை சஞ்சீவ கொலை 12 பேர் கைது!

கொழும்பு, ஜுன் 30

கணேமுல்லை சஞ்சீவவின் கொலையுடன் தொடர்புடைய 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டு தற்போது தலைமறைவாக உள்ள இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டு தப்பிச் செல்லவில்லை. எனினும், மற்ற சந்தேகநபர்கள் மூலம் இஷாரா செவ்வந்தி பற்றிய சில தகவல்கள் வெளியாகியுள்ளன என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

சம்பவம் நடந்த நீதிமன்றத்தில் பாதுகாப்பு குறைபாடு இருந்ததே இந்த சம்பவத்துக்குக் காரணம். தாக்குதல் பற்றி எந்த முற்கூட்டிய தகவலும் தமக்கு கிடைக்கவில்லை. எனினும்,

கணேமுல்லை சஞ்சீவவின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறப்பட்டிருந்தது - என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்படுத்தாத பென்ஸ் காருக்கு மாதந்தம் 2.4 இலட்சம் வாடகை!

## கெஹலியமீது மற்றொரு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 30

**சுகாதார அமைச்சராக இருந்தபோது தனது பயன்பாட்டில் இருந்ததாகக் கூறி பென்ஸ் கார் ஒன்றுக்கு வாடகையாக மாதாந்தம் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயை கெஹலிய மோசடியாக பெற்றுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு களை விசாரிக்கும் ஆணையம் விசாரணைகளை தொடங்கி யுள்ளது.

இது தொடர்பில் தென்னி லங்கை ஊடகம் ஒன்று வெளி யிட்ட செய்தியில் மேலும் தெரி விக்கப்பட்டவை வருமாறு,

கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக இருந்த போது பென்ஸ் காரைப் பயன்ப டுத்தினார் என்று கூறி, இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு பென்ஸ் காருக்கு 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாயை மாத வாடகையாக பெற்றுள்ளார்.

எனினும், இந்த பென்ஸ் கார் சுகாதார அமைச்சின் வளாகத் துக்குள் ஒருபோதும் நுழைந்த தில்லை. அந்த பென்ஸ் கார் கிருலப்பனை பகுதியிலுள்ள ஒரு வாகன விற்பனை நிலை யத்தில் விற்பனைக்காக வைக் கப்பட்டிருந்தது என்றும் தெரி விக்கப்பட்டது.

எனினும், இந்த பென்ஸ் காருக்கு சுகாதார அமைச்சி லிருந்து கெஹலியவின் நண்பர் களில் ஒருவரின் வங்கிக் கணக் கில் மாதாந்தம் 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் வரவு வைக் கப்பட்டுள்ளது. அந்த நபர் ஒவ்வொரு மாதமும் சம்பந்தப் பட்ட தொகையை கெஹலிய விடம் வழங்கியுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

அநுராதபுரம் துப்பாக்கிச்சூடு:

# காயமடைந்தவரின் நண்பர்கள் கைது!

கொழும்பு, ஜூன் 30

அநுராதபுரத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்ப வத்தில் படுகாயமடைந்தவரின் நண்பர்கள் ஐவர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இதனிடையே, போதைப் பொருள் தொடர்பான விவகா ரமே துப்பாக்கிச்சூட்டுக்கு காரணமாக அமைந்தது என்று அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை அநுராதபுரம் - திரப்பனை, கல்குளம் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயமடைந்தவர்.

படுகாயமடைந்தவர் மிகிந்தலையைச் சேர்ந்த 28 வயதுடையவராவார். அநுரா தபுரம் போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் அவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படை யில் அவரின் நண்பர்கள் ஐவர் கைது செய்யப்பட்டனர்.

கைதான ஐவரும் அநுரா தபுரம் சியம்பலாகஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 29 முதல் 31 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர். மேலதிக விசாரணை களை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## இன்று கூடுகிறது பாராளுமன்றம்!

கொழும்பு, ஜூன் 30

பாராளுமன்றம் இன்றைய தினம் விசேட அமர்வுக்காக கூடுகிறது. சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் காலை 9.30 மணிக்கு பாரா ளுமன்றம் கூடும்.


2024 ஆம் ஆண்டு 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத் துவ சட்டத்தின் 11ஆவது பிரிவின்படி, ஒவ்வோர் ஆண் டும் ஜூன் 30 அல்லது அதற்கு முன்னர் அரசாங்கம் நிதி உத்தி யோகபூர்வ அறிக்கையை வெளியிட வேண்டிய தேவையை நிறைவேற்றுவதற்காக இவ் வாறு பாராளுமன்றம் கூடுகி றது என்று பாராளுமன்ற பொது செயலாளர் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நிலை யியல் கட்டளைகள் 16இன் படி, பிரதமரின் கோரிக்கைக்கு அமைய சபாநாயகரால் இன்று பாராளுமன்றம் கூட்டப்படு கிறது.

பாராளுமன்றம் மீண்டும் ஜூலை 8, 9 மற்றும் 11 ஆகிய தினங்களில் கூடவுள்ளது என்று பாராளுமன்ற பொதுச் செய லாளர் பணிமனை தெரிவித் துள்ளது. (ஐ)

## கொழும்பு துறைமுக கொள்கலன் நெருக்கடி முடிவுக்கு வந்துள்ளது!

### சுங்கத் திணைக்களம் அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 30

கொழும்பு துறைமுகத்தில் இறக்குமதி கொள்கலன்களை அனுமதிப்பதில் ஏற்பட்டிருந்த நெரிசல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக இறக்குமதி கொள்கலன்களை அனுமதிப்பதற்கு கூடுதல் நாட் கள் எடுக்க வேண்டியிருந்தது என்றும் இறக்குமதி கொள்க லன்களின் எண்ணிக்கை அதிக ரித்ததே இதற்கு காரணம் என வும் மேலதிக சுங்கப் பணிப்பா ளரும் சுங்க ஊடகப் பேச்சாள ருமான சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

ஒரு நாளில் சுமார் 1,200 இறக்குமதி கொள்கலன்கள் வந்த நிலையில், சில நாட்களில் இது 2 ஆயிரத்து 900ஆக உயர்ந் தது. இதனால், இறக்குமதி கொள்கலன்களை அனுமதிப் பதற்கு கூடுதல் நேரம் எடுக்க வேண்டியிருந்தது.

எவ்வாறாயினும், இன்று (நேற்று) காலை நிலவரப்படி இந்த தாமதம் முற்றிலும் முடி வுக்கு கொண்டுவரப்பட்டுள் ளது. கொழும்பு துறைமுகத்தில் இருந்து விடுவிக்கப்பட வேண் டிய அனைத்து கொள்கலன்களும் சுங்கத்தால் அனுமதிக்கப்பட்டு நிறைவுறுத்தப்பட்டுள்ளது என் றும் அவர் மேலும் கூறினார்.

# மலையகத்துக்கான ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, ஜூன் 30

பதுளை - கொழும்பு கோட்டை இடையேயான ரயில் சேவை நேற்றைய தினமும் பாதிக்கப்பட்டுள்ளது.

உடவறை, தெமோதர இடையே ரயில் பாதையில் பாறை விழுந்ததாலேயே சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் மாலை பதுளை மற்றும் ஹாலிஎல பகுதிகளில் பெய்த பலத்தமழை காரணமாக நேற்றையதினம் மண்மேடு சரிந்ததால் இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

இதனால், நேற்று காலை 5:45 மணிக்கு பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி புறப்பட்ட உடரட மெனிகே ரயில் ஹாலி எல ரயில் நிலையத்தில் நிறுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு - பதுளை நோக்கி பயணித்த இரவு அஞ்சல் ரயில் தெமோதர ரயில் நிலையத்தில் நிறுத்தப் பட்டுள்ளது.

பாறைகளை அகற்றும் பணி முன்னெடுக்கப்படுகிறது. எனினும், பாறைகளை அகற்றி நிலைமையை வழமைக்கு கொண்டுவர ஒருநாள் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, கடந்த வெள ளிக்கிழமையும் மலையகத்துக் கான ரயில் சேவை பல மணிநே ரம் தடைப்பட்டிருந் தது என் பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரச மருத்துவ அதிகாரி சங்க தலைவராக மீண்டும் சஞ்சீவ

கொழும்பு, ஜூன் 30

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாக தேர்தலில் மருத்துவர சஞ்சீவ தென்ன கோன் மீண்டும் தலைவராக தெரிவாகியுள்ளார். இதே போன்று, மருத்துவர் பிரபாத் சுகததாச மீண்டும் செயலாள ராக தெரிவானார்.



நேற்று முன்தினம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தின் நிர்வாக தேர்தல் நடை பெற்றது. இதில், 60 சதவீதத் துக்கும் அதிகமான வாக்குக ளைப் பெற்று இருவரும் அந் தந்த பதவிகளுக்கு மீண்டும் தெரிவாகினர். (ஐ)

## 9 வயது சிறுமிமீது வன்கொடுமை தாயுடன் உறவிலிருந்தவர் கைது!

கொழும்பு, ஜூன் 30

சுமார் 2 வருடங்களாக 9 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத் திய சந்தேகநபர் கைது செய் யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் சிறுமியின் தாயுடன் முறை யற்ற தொடர்பில் இருந்தவர் என்று கூறப்படுகிறது.

புத்தளம், வனாத்தவில்லு பிரதேசத்தில் இடம்பெற்றுள் ளது.

சிறுமியின் தாயார் வீட்டில் வேறு பணிகளை செய்து கொண்டிருந்த சமயத்திலும் அவர் இல்லாத நேரத்திலும் தன்னை சந்தேகநபர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தி னார் என்று சிறுமி பொலிஸா ருக்கு அளித்த வாக்குமூலத் தில் தெரிவித்துள்ளார்.

கைதானவர், 30 வயதுடை யவர் என்றும் அவர் ரயில் ஓட்டுநர் எனவும் கூறப்படுகி றது.

சந்தேக நபர் முதலில் தன்னை வன்கொடுமை செய்த திகதிகள் தெளிவாக நினைவில் இல்லை எனவும் 2023ஆம் ஆண்டு முதல் தன்னை வன் கொடுமை செய்துள்ளார் என் றும் சிறுமியின் வாக்குமூலத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ பரிசோதனைக் காக சிறுமி சட்ட மருத்துவ அதிகாரியின் பாதுகாப்பில் உள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கார் விபத்தில் மூவர் காயம்!

கொழும்பு, ஜூன் 30

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் தடம்புரண்டதில் மூவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா - பம்பரகலை - பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம் பெற்றது.

கண்டியிலிருந்து நுவரெ லியா வழியாக பண்டாரவளை நோக்கிச் சென்ற காரே இவ் வாறு தடம் புரண்டது. இதில், காயங்களுக்கு உள்ளான மூவர் நுவரெலியா பொது மருத்து வமனையில் சேர்க்கப்பட் டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஜனாதிபதி அநுர குமார மாலைதீவுக்கு பயணம்?

கொழும்பு, ஜூன் 30

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஜூலை இறுதி வாரத்தில் மாலைதீவுக்கு உத்தி யோகபூர்வ பயணம் மேற்கொள் ளவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், அவரின் 6ஆவது வெளி நாட்டு பயணமாக இது அமை யவுள்ளது. எதிர்வரும் ஜூலை 29ஆம் திகதி இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை நினை வுகூரும் நிகழ்விலும் ஜூலை 26 ஆம் திகதி மாலைதீவின் சுதந் திர தின கொண்டாட்டத்தை முன்னிட்டும் இந்தப் பயணம் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இருப்பினும், இந்த பயணத்தை ஜனாதிபதி பணிமனை இன்னமும் உறுதி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்காலையில் படகு விபத்து இருவர் மாயம்; நால்வர் மீட்பு

கொழும்பு, ஜூன் 30

**தங்காலை கடற்பரப்பில் இடம்பெற்ற படகு விபத்தில் மீன வர்கள் இருவர் காணாமல் போயுள்ளனர். அத்துடன், நால் வர் மீட்கப்பட்டுள்ளனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.**

அம்பாந்தோட்டை - தங் காலை, பரவி வெல்ல கடற்க ரையில் படகு விபத்து ஏற்பட் டபோது அந்த படகில் மொத் தம் 6 மீனவர்கள் இருந்துள்ளனர்.

காணாமல் போன மீனவர் களை தேடும் பணி தொடர்ந்து வருவதாக கடற்படை தெரிவித் துள்ளது.

இதேசமயம், நேற்று முன் தினம் காலி, ஹிக்கடுவை, கடு ளுத்துறை - பேருவளை கடற்ப ரப்புகளில் மூன்று படகுகள் விபத் துக்கு உள்ளாகியிருந்தன என்ப தும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டெங்கு பரவல் தடுப்பு வாரம் இன்று முதல் ஆரம்பமாகிறது

கொழும்பு, ஜூன் 30

டெங்கு மற்றும் சிக்குன்குன்யா நோய் பரவலை கட்டுப்படுத்தும் வகையில் இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 6ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரம் நடைமுறைத்தப்படவுள்ளது.

16 மாவட்டங்களை இலக் காகக் கொண்டு இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று சுகாதார பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குண வர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் இதுவரை யான காலப்பகுதியில் 27 ஆயி ரத்து 932 பேர் டெங்கு காய்ச்ச லால் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 16 உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஏப்ரல், மே மாதங்களில் மட்டும்

# ரூ. 2,300 கோடி பெறுமதியான போதைப்பொருட்கள் சிக்கின!

கொழும்பு, ஜூன் 30

கடந்த ஏப்ரல், மே மாதங்க ளில்நாட்டுக்குள் கடத்தப்பட்ட 2 ஆயிரத்து 300 கோடி ரூபாய் பெறுமதியான ஆயிரத்து 758 கிலோ ஹெரோயின், ஐஸ் போதைப்பொருட்கள் கைப் பற் றப்பட்டன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தால் முன்னெ டுக்கப்பட்ட 4 சோதனை நடவ டிக்கைகளில் நெடுநாள் மீன் பிடி படகுகள் மூலம் கடத்தி வரப்பட்ட இந்தப் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட் டன என்று தெரிவிக்கப்பட் டது.

அத்துடன், கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 25 சந்தேக நபர்களையும் அந்த பணியகம் கைது செய்துள்ளது.

2025ஆம் ஆண்டு இது வரையிலான காலப்பகுதி வரை யில் கடல் வழியாக நாட்டுக்குக் கொண்டு வரப்பட்ட போதைப் பொருளின் அளவு மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடக பிரிவு இதனை குறிப் பிட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் பெறுமதி சுமார் ஆயிரத்து 84 கோடி ரூபாய் என்றும் ஐஸ் போதைப் பொருளின் மதிப்பு ஆயிரத்து 216 கோடி ரூபாய் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## லொறிகள் விபத்து 7 பேர் படுகாயம்!

கொழும்பு, ஜூன் 30

இரு லொறிகள் மோதிய விபத்தில் இரு குழந்தைகள் உட்பட 7 பேர் படுகாயம டைந்துள்ளனர்.

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் கேகாலை - உத்துவன் கந்த பகுதியில் நேற்று அதி காலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

லொறிகள் நேருக்கு நேர் மோதிய இந்த விபத்தில் குழந் தைகள் இருவர் உட்பட ஏழு பேர் படுகாயமடைந் துள்ளனர் என்றும் விபத்து குறித்து விபத்து தொடர்பான மேலதிக விசார ணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர் என்றும் தெரி விக்கப்பட்டது. (ஐ)

## நீரில் மூழ்கியோரை காப்பாற்றிய பொலிஸ்

கொழும்பு, ஜூன் 30

கடல் அலையால் அடித் துச் செல்லப்பட்ட இரு வரை பொலிஸ் அதிகாரிகள் காப் பாற்றியுள்ளனர்.

அம்பாந்தோட்டை - உஸ் ஸன்கொட கடலில் நேற்று முன் தினம் மாலை இருவர் நீராடிக் கொண்டிருந்தனர். அந்தச் சம யம் இருவரையும் கடல் அலை அடித்துச் சென்றது.

அந்தச் சமயம் கடற்கரை யில் உயிர்காக்கும் பணியில் இருந்த அதிகாரிகள் உடனடி யாக நடவடிக்கை எடுத்து இருவரையும் மீட்டு, அவர்க ளுக்கு முதலுதவி அளித்து காப்பாற்றினர்.

இந்த அனர்த்தத்தில் சிக்கிய இருவரும் ஹுங்கம பகுதியைச் சேர்ந்த 19, 34 வயது உடைய வர்கள் என்று தெரிய வருகிறது. (ஐ)

# மலையில் காணாமல்போன 8 மாணவர்கள் மீட்கப்பட்டனர்



கண்டி, ஜூன் 30

கண்டியில் உள்ள ஹந் தானை மலையில் காணாமல் போன எட்டு மாணவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள் ளனர்.

இவர்கள் அனைவரும் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை படையினரால் மீட்கப்பட்டனர்.

ஹந்தானை மலை உச்சிக்குச் சென்றிருந்த மாணவர்கள் நேற் றுமுன்தினம் மாலையிலிருந்து கீழே இறங்கிக் கொண்டிருந்த போது, மூடுபனி, மழையால் பாதை மாறிப் போயினர்.

இது தொடர்பில், மற்றைய மாணவர் குழு தகவல் வழங் கியதன் அடிப்படையில் தலத் துஓயா பொலிஸ் அதிகாரிகள், படையினர் தேடுதலில் ஈடுபட் டனர்.

இதைத் தொடர்ந்து நேற்று அதிகாலை 4 மணியளவில் மாணவர்கள் மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்ட எட்டு மாண வர்களும் பின்னர் பேராதனை மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு, மருத்துவ பரிசோதனை யின் பின்னர் வீடு திரும்பினர்.

# கடவுச்சீட்டு தரகர்களுக்கு பணம் வழங்க வேண்டாம்!

## மக்களுக்கு அரசு அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 30

குடிவரவு- குடியகல்வு திணைக்களத்தின் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க அல்லது செயல்முறையை விரைவுபடுத்த தரகர்களுக்கு பணம் செலுத்த வேண்டாம் என்று பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் வளாகத் துக்குள் அல்லது வெளியே செயல்படும் தரகர்களுக்கு பணம் கொடுக்க வேண்டாம். கடவுச்சீட்டு கட்டணங்களுக்கு பணம் செலுத்தும் இடத்தில் மாத்திரம் அதனை செலுத்தி உத்தியோகபூர்வ பற்றுச் சீட்டை பெற்றுக்கொள்ளுங்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

வழமையான மற்றும் ஒரு நாள் கடவுச்சீட்டு சேவைகளுக் கான டோக்கன் அட்டைகள் தற்போது தினமும் காலை 6:30 மணி முதல் பிற்பகல் 2:00 மணி வரை வழங்கப்படுகின்றன என் பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அதிகாரத்தை தக்கவைக்க அராஜகமாக நடக்கும் அரசு

## சந்திம வீரக்கொடி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 30

ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் மக்கள் தேவைக்கு அதிகமான அதிகா ரத்தை வழங்கினர். எனினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்தின் அந்த எதிர் பார்ப்பு நிறைவேற்றப்படவில்லை. அதனால், அரசாங்கம் அராஜ கமாக உள்ளூராட்சி மன்றங்க ளில் அதிகாரத்தை தக்கவைத் துக் கொள்வதற்கான செயல் பாடுகளில் ஈடுபட்டுள்ளது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தி னம் சனிக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிகையில்-

"எந்த வழியிலேனும் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற் காக ஜனநாயகத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கான போராட்டம் தற்போது ஆரம் பமாகியுள்ளது. அரசாங்கத்தி னால் மக்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்படுவதற்கு எதி ராக அன்று நாம் போராடி னோம். அந்த போராட்டத்தில் ஜே. வி. பி. முன்னிலை வகித் தது. ஆனால், இன்று ஜே.வி.பி. அதற்கு முரணாகவே செயற்பட் டுக் கொண்டிருக்கிறது.

"இதற்காக திட்டமிட்டு நாடகங்களும் அரங்கேற்றப் படுகின்றன. வெலிகம பிரதேச பையில் தேசிய மக்கள் சக்தி யின் நாடகம் அரங்கேற்றப் பட்ட போது 400-500 பேர் வரையில் சபையை சுற்றி வளைக்கின்றனர். ஆனால், காணாமற்போனதாகக் கூறப்படும் உறுப்பினர்கள் தனி யாகவே சபைக்கு வந்தனர் என்று கூறப்படுகிறது. இது திட்ட மிட்ட ஒரு நாடகம் என்பது வெளியிலிருந்து பார்க்கும் எந்தவொரு நபருக்கும் மிகத் தெளிவாகத் தெரியும்.

"ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் மக்கள் தேவைக்கு அதிகமான அதிகா ரத்தை வழங்கினர். எனினும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கத்தின் அந்த எதிர் பார்ப்பு நிறைவேற்றப்பட வில்லை. அதனால் தமது எதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொள்வதற்காக இவ்வாறான நாடகங்களை அரங்கேற்றி, அராஜகமாக சபைகளில் ஆட்சியமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது.

"பல உள்ளூராட்சி மன் றங்களில் சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகும்போது தேசிய மக்கள் சக்தியின் ஆதரவா ளர்கள் எனக் கூறப்படுபவர்க ளால் அரச சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள் ளது. பொலிஸார் கடமையில் இருக்கும் போது தான் இவ்வா றான சம்பவங்கள் இடம்பெறு கின்றமை ஆச்சர்யமளிக்கிறது. ஆனால் இவை ஆபத்தானவை. மக்களுக்கு இது நன்றாகப் புரி யும்", என்றார். (அ)

# நாட்டில் வெவ்வேறு விபத்துகளில் சனியன்று ஐவர் உயிரிழந்தனர்!

கொழும்பு, ஜூன் 30

நாட்டின் வெவ்வேறு பகு திகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத் துகளில் ஐவர் உயிரிழந்தனர்.

புத்தளம் - நுரைச்சோலை யில் பாலாவி - கற்பிட்டி வீதி யில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தனியார் பேருந்து வீதியோரம் நிறுத்தப்பட்டி ருந்தது. லொறி ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதி யதில் பேருந்தில் இருந்து இறங் கிநின்ற இருவர் உயிரிழந் தனர்.

இவ்வாறு உயிரிழந்தோர் கம்பஹா ஜா எல், நீர்கொழும்பை சேர்ந்த 15, 74 வயதுடையவர் களாவர்.

ஏ-9 வீதியில் வவுனியா - கனகராயன் குளம் பகுதியில் ஓட்டோ ஒன்றை பின்னால் வந்த பேருந்து மோதிய விபத் தில் ஓட்டோ சாரதி உட்பட மூவர் படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவர் உயிரிழந் தார். உயிரிழந்தவர் நெடுங்கே ணியை சேர்ந்த 46 வயதுடை யவராவார்.

மொனராகலை - வெல்ல வாய பகுதியில் லொறி ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்த விபத்தில் அதன் சாரதி உயிரிழந்தார். உயி ரிழந்தவர் பண்டாரவளை, துங் கொல்ல பிரதேசத்தை சேர்ந்த 34 வயதுடையவராவார்.

கம்பஹா - ஹேராமாகம பேருந்து மோட்டார் சைக் கிளை மோதியது. இதில், மோட் டார் சைக்கிளை செலுத்தியவர் உயி ரிழந்தார். உயிரிழந்தவர் அதே இடத்தை சேர்ந்த 43 வயது நப ராவார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை

கல்முனை, ஜூன் 30

**சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு குழுவில் ஆராயப்பட்டுள்ளது.**

அம்பாறை - கல்முனைக்குடி 14ஆம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் இயங்கி வரும் பொது மக்கள் பாதுகாப்புக் குழுவின் மாதாந்த ஒன்றுகூடலும் புதிதாக குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்ட அங்கத்தவர்களை வரவேற்கும் நிகழ்வும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பொது மக்கள் பாதுகாப்பு குழுவின் தலைவர் முஸ்தபா முபாறக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்முனை பொலிஸ் நிலையத்தின் தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் கலந்து கொண்டார்.

புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட அங்கத்தவர்கள் அறிமுகம், கிராம உத்தியோகத்தர் பிரிவின் கீழ் அமையப்பெற்றுள்ள கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவிகள் எதிர்நோக்கும் வீதிப் போக்குவரத்து பிரச்னைகள், பிரதேச சமூக பாதுகாப்பு தொடர்பான செயல்பாடுகள், சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் பாவனைகள், சிவில் குற்றங்கள், முரண்பாடுகள், குடும்பப் பிரச்னைகள் போன்ற பல்வேறுபட்ட தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடப்பட்டன. (எ)

# கலாசார அதிகார சபை புதிய நிர்வாகம் தெரிவு



கிண்ணியா, ஜூன் 30

2025 ஆம் ஆண்டுக்கான திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச கலாசார அதிகார சபையின் நிர்வாகத் தெரிவு கிண்ணியா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் முகம்மது கனி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கலாசார அதிகார சபையின் தலைவராக கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனி, ஒருங்கிணைப்பாளராக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹில்மி, உப தலைவராக ஒய்வு நிலை அதிபர் சலீம், செயலாளராக உளவளத்துணை உத்தியோகத்தர் ரியாத், உபசெயலாளராக தினேஷ்காந், பொருளாளராக ஏ. முகமட், ஆலோசகர்களாக ஹலால்தீன், கஸ்புள்ளா, கலாபூஷணம் திருமதி சித்தி சபீனா வைத்துல்லா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

செம்மணி மனித புதைகுழிக்கு

# “தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை”

கிண்ணியா, ஜூன் 30

செம்மணி மனித புதைகுழிக்கு தீர்வு கிடைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை என்று முன்னாள் பிரதி அமைச்சரும் மூதூர் தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளருமான அப்துல்லாஹ் மஹரூப் தெரிவித்தார்.

திருகோணமலை, கிண்ணியாவில் உள்ள அவரது காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வருகையின் போது நீண்டகாலமாக புரையோடி போய்க் கிடக்கின்ற செம்மணி படுகொலை சம்பந்தமாக தமிழ்த் தலைமைகள் விரிவாக பேசிய போதும், அவர் நாட்டைவிட்டு வெளியேறும் போது வெளியிட்ட அறிக்கை அவ்வளவு ஆரோக்கியமானதாக இல்லை.

இஸ்ரேல் இராணுவத்தால் சிறு குழந்தைகளும் பெண்களும் மருத்துவமனை தாக்கப்பட்டு கொல்லப்படுகின்ற போதும் அது தொடர்பில் எந்தவொரு முன்னெடுப்பையும் எடுக்காத ஓர் ஆணையாளரால் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் தீர்வு கிடைக்கும் என்பதில் நம்பிக்கை இல்லை.

ஏற்கனவே நவநீதம்பிள்ளை, செம்மணி தொடர்பிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பாகவும் அதன் உண்மைத் தன்மை தொடர்பாகவும் மிக விரிவான அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

ஆனால், தற்போது இஸ்ரேலியர்களால் காஸா மக்கள் கொல்லப்படுவதை ஐ.நா. ஆணையாளரால் கண்டிக் கவோ அறிக்கையிடவோ முடியாத போது எவ்வாறு செம்மணிக்குத் தீர்வு கிடைக் கும். எனக்கு நம்பிக்கை இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# பிள்ளையானை விடுதலை செய்க மட்டக்களப்பில் மக்கள் போராட்டம்

மட்டக்களப்பு, ஜூன் 30

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனை (பிள்ளையான்) பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திலிருந்து விடுவிக்கக் கோரி நேற்று முன்தினம் வாழைச்சேனை - பேத்தாழையில் கையெழுத்துப் போராட்டம் நடைபெற்றது.

வாழைச்சேனை பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து ஜனாதிபதியின் கவனத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டு செல்லும் வகையில் போராட்டத்தை ஒழுங்குபடுத்தியிருந்தனர்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தனின் விடுதலையை வேண்டி பேத்தாழை மாவடி மாரியம்மன் ஆலயத்தில் விசேட பூஜை இடம்பெற்ற பின்னர் கையெழுத்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். (எ)

# திருமலையில் பாலத்தில் மோதி சிறிய ரக லொறி நேற்று விபத்து

திருகோணமலை, ஜூன் 30

திருகோணமலை - ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள இலங்கைத்துறை முகத்துவாரம் பகுதியில் சிறிய ரக லொறி விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

தோப்பூரிலிருந்து வெருகல் நோக்கி சிறிய ரக லொறியில் வியாபாரத்துக்காக பொருட்களை ஏற்றிச் சென்ற போது முகத்துவாரம் பாலத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் சிறிய ரக லொறி சாரதியான தோப்பூரைச் சேர்ந்த 35 வயதுடைய நபர்படுகாயமடைந்து ஈச்சிலம் பற்று பிரதேச மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணை களை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# “முறையற்ற இடமாற்றம்”

திருகோணமலை, ஜூன் 30

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான முறையற்ற இடமாற்றம் கண்டிக்கத்தக்கதாகும். இது திட்டமிடப்பட்ட இடமாற்றமாகும் என திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச சபையின் உப தவிசாளர் வி. விஜயகுமார் குற்றஞ் சாட்டியுள்ளார்.

தம்பலகாமத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# பராமரிப்பின்றி காணப்படும் பேருந்து நிறுத்த நிழல்குடை

## பயணிகள் அசௌகரியம்

நிந்தவூர், ஜூன் 30

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச சபைக்குட்பட்ட பொலிஸ் நிலையத்துக்கு அருகில் காணப்படும் பேருந்து நிறுத்த நிழல்குடை உரிய பராமரிப்பு இன்றி காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த நிழல்குடை நீண்ட காலமாக எந்த வித பராமரிப்பு இன்றியும் கூரை உட்பட அதன் இருக்கைகளும் சேதமடைந்து காணப்படுகிறது.

அன்றாடம் தமது அடிப்படைத் தேவைகளுக்காக இந்த பேருந்து நிழல்குடை உள்ள இடத்திலிருந்து பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இவ்விடத்தை பயன்படுத்துவதில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

பிரதான வீதியில் அக்கரைப்பற்று கல்முனை பேருந்து வரும் வரை காத்திருக்கும் வேளைகளில் காகங்கள் மற்றும் இதர பறவைகளின் எச்சங்கள், விசப்பாம்புகளின் அச்சுறுத் தலும் பொதுமக்களுக்கு ஏற்படுவதுடன் இன்று கூட இந்த நிழல்குடையை கால்நடைகள் தங்கும் இடமாக பயன்படுத்தி வருகின்றன.

இதனால் பொதுமக்கள் குறித்த நிழல்குடை உள்ள இடத்திலிருந்து பயணம் மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

தற்போது அதிக வெயில் காலம் என்பதனால் இதன் கூரைப்பகுதி மற்றும் நிழற்குடையின் சுற்றுச் சூழலை உடனடியாக திருத்தம் செய்து தருமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ- 01)

# கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம்



கல்முனை, ஜூன் 30

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்துக்கு அமைவாக கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அதிபர் ஏ. ஜி. முகம்மது நிஷாத் தலைமையில் நேற்று முன்தினம் சிரமதானப் பணிகள் நடைபெற்றன.

இதன்போது பாடசாலை வளாகம் முற்று முழுதாக ஆசிரியர்களாலும் சிரமதானம் செய்யப்பட்டது.

மேலும் அலங்கார மரங்களுக்கான சொட்டு நீர் பாய்ச்சல் திட்டமும் அறிமுகப் படுத்தப்பட்டு அதற்கான வேலைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# காஸாவில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்!

## சிறுமிகள் உள்ளிட்ட 81 பேர் உயிரிழப்பு



காஸா, ஜூன் 30

**காஸாவில் இஸ்ரேல் இராணுவம் மீண்டும் சரமாரி தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் சிறுமிகள், பெண்கள் உள்ளிட்ட 81 பேர் உயிரிழந்தனர்.**

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, ஹமாஸ் அமைப்பு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காஸா முனையில் தாக்குதல் நடத்தி வருகிறது. இதுவரை காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் சுமார் 56 ஆயிரம் பலஸ்தீனியர்கள் உயிரிழந்ததாக காஸா சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக அழிக்கும் வரை போர் நிறுத்தம் ஏற்படாது என இஸ்ரேல் அரசு உறுதியாக தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஹமாஸ் அமைப்பினரிடம் உள்ள பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது. பணயக் கைதிகளில் சிலர் ஹமாஸ் அமைப்பினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டன.

இதற்கிடையில் உணவு பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக காஸாவில் மிக மோசமான நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

காஸா மக்களுக்காக அனுப்பி வைக்கப்பட்ட உணவுப் பொருட்களை சுமார் இரண்டரை மாதங்களாக இஸ்ரேல் இராணுவம் நிறுத்தி வைத்துள்ளது. மே மாதம் முதல் மிகச் சிறிய அளவில் மட்டுமே காஸாவுக்குள் உணவுப்பொருட்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன.

ஐ.நா. சார்பில் வாகனங்களில் அனுப்பி வைக்கப்பட்ட உணவுப் பொருட்களை சிலர் கூட்டமாக வந்து கொள்ளையடித்துச் சென்றதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில், இஸ்ரேல் - காஸா இடையிலான மோதலை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் முயற்சி செய்து வருகின்றன. இது குறித்து பேசிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், காஸாவில் அடுத்த வாரம் போர் நிறுத்தம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்தச் சூழலில், காஸா மீது இஸ்ரேல் இராணுவம் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளது. காஸாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள முகாம்கள், குடியிருப்பு கட்டடங்கள் உள்ளிட்ட இடங்களில் நேற்றுக் காலை நடந்த தாக்குதல்களில் 81 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# காஸாவில் ஒரு வாரத்தில் போர் நிறுத்தம் ஏற்படும்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நம்பிக்கை

வாஷிங்டன், ஜூன் 30

காஸாவில் ஒரு வாரத்துக்குள் போர் நிறுத்தம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கொங்கோ-ருவாண்டா ஒப்பந்தத்தைக் கொண்டாடும் ஓவல் அலுவலக நிகழ்வில், இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் நெருங்கிவிட்டதாக தான் நம்புவதாக ட்ரம்ப் செய்தியாளர்களிடம் கூறினார். இது குறித்து வெள்ளை மாளிகையில் அவர் பேசுகையில், "இஸ்ரேல் -ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் நெருங்கிவிட்டது என்று நினைக்கிறேன். சம்பந்தப்பட்ட சிலரிடம் நான் இப்போதுதான் பேசினேன். அடுத்த வாரத்துக்குள் போர் நிறுத்தம் ஏற்படும் என்று நாங்கள் நினைக்கிறோம்"-என்றார். ஆனால், போர் நிறுத்தம் குறித்து யாரிடம் பேசப்பட்டு வருகிறது என்ற தகவலை ட்ரம்ப் வெளியிடவில்லை.

இஸ்ரேல் உடனான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தத்தில் தங்கள் வசமுள்ள பணயக்கைதிகளை விடுவிக்கத் தயாராக இருப்பதாக ஹமாஸ் கூறியுள்ளது. ஆனால், ஹமாஸ் ஆயுதங்களை முழுமையாக கைவிட்டால் மட்டுமே போரை முடிவுக்கு கொண்டுவருவோம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். ஆனால், ஆயுதங்களை கைவிட முடியாது என ஹமாஸ் மறுத்து வருகிறது.

2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி அன்று ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலைத் தாக்கி 1,200 பேரைக் கொன்று, 251 பேரை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றதால் காஸாவில் போர் தொடங்கியது. இந்த நிலையில், இஸ்ரேலின் இராணுவத் தாக்குதலில் இதுவரை 56,000 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக காஸாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஈரான் இடையே அமெரிக்காவின் முன்மொழிவின் பேரில் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ள நிலையில், காஸாவிலும் அமைதி திரும்ப வேண்டுமென பல்வேறு நாடுகளும் கோரிக்கை வைத்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# தற்கொலைப்படை தாக்குதலில் 13 இராணுவத்தினர் உயிரிழப்பு!

## பின்னணியில் இந்தியா பாகிஸ்தான் குற்றச்சாட்டு

லாகூர், ஜூன் 30

தற்கொலைப்படை தாக்குதல் பின்னணியில் இந்தியா உள்ளதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது.

பாகிஸ்தானின் கைபர் பக்துவா மாகாணம் வசீரிஸ்தான் மாவட்டத்தில் இராணுவ வாகனத்தை குறிவைத்து நேற்று முன்தினம் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தப்பட்டது. வெடிகுண்டுகள் நிறப்பப்பட்ட காரை கொண்டு இராணுவ வாகனம் மீது மோதி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், 13 இராணுவத்தினர் உயிரிழந்தனர். மேலும் 10 இராணுவத்தினர், 19 பொதுமக்கள் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

இந்த நிலையில், தற்கொலைப்படை தாக்குதல் பின்னணியில் இந்தியா இருப்பதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது. இதேவேளை, பாகிஸ்தானின் குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ளது. (எ)

### படையினர், அணு விஞ்ஞானிகளின்

# இறுதி ஊர்வலத்தில் மக்கள் அணிதிரள்வு

தெஹ்ரான், ஜூன் 30

ஈரானில் படையினர் மற்றும் அணு விஞ்ஞானிகளின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

ஈரான் மீது இஸ்ரேல் கடந்த 13ஆம் திகதி திடீரென தாக்குதலில் ஈடுபட்டது. ஈரானில் அணுசக்தி நிலையங்கள் அமைந்த நடான்ஸ் மற்றும் இஸ்பஹான் ஆகிய இடங்கள் மற்றும் ஏவுகணை தளங்கள் அமைந்த தப்ரீஸ் மற்றும் கெர்மன்ஷா மற்றும் தெஹ்ரான் நகரில் உள்ள கட்டுப்பாட்டு மையங்கள் உட்பட 100 இற்கும் மேற்பட்ட இடங்களை இலக்காக கொண்டு, ஒப்ரேஷன் ரைசிங் லயன் என்ற பெயரில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

200இற்கும் மேற்பட்ட விமானங்கள் மற்றும் ஆளில்லா விமானங்களை கொண்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், ஈரான் புரட்சி படைத் தளபதி உசைன் சலாமி மற்றும் அணு விஞ்ஞானி பெரேதூன் அப்பாஸி உள்ளிட்ட பலர் உயிரிழந்தனர். மூத்த இராணுவ தளபதியான மேஜர் ஜெனரல் அலி ஷாத்மனி, மேஜர் ஜெனரல் குலாம் அலி ரஷீத் ஆகியோரும் பலியாகினர்.

இஸ்ரேல் நடத்திய தொடர் தாக்குதலில், ஈரானின் ஏவுகணை கிடங்கில் 3இல் ஒரு பகுதி அழிக்கப்பட்டு விட்டது என தெரிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில், ஈரானில் 627 பேர் பலியாகினர். இதுபற்றி இஸ்ரேலின் மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் கூறும்போது, 30இற்கும் மேற்பட்ட மூத்த பாதுகாப்பு அதிகாரிகள், 11 அணு விஞ்ஞானிகள் கொல்லப்பட்டனர் -என்றார். இந்த நிலையில், உயிரிழந்த பாதுகாப்பு அதிகாரிகள், அணு விஞ்ஞானிகள் உள்ளிட்டோரின் இறுதி ஊர்வலம் நேற்று நடந்தது.

தெஹ்ரானில் உள்ள ஆசாதி சதுக்கத்தில் அவர்களுடைய புகைப்படங்கள் மற்றும் தேசிய கொடிகளுடன் பிரேதப்பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டு வைக்கப்பட்டன. இறுதி ஊர்வலத்தில் ஈரான் ஜனாதிபதி மன்சூர் பெஷ்கியன் மற்றும் புரட்சி படையின் தலைவர் குவானி உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

இதேபோன்று, நாட்டு மக்கள் ஆயிரக்கணக்கானோரும் கலந்து கொண்டனர். அவர்கள் கொடிகளை அசைத்தபடி காணப்பட்டனர்.

# எகிப்தில் கோர விபத்து 19 பேர் உயிரிழந்தனர்



கெய்ரோ, ஜூன் 30

தொழிலாளர்களுடன் பயணித்த பஸ் மீது லொறி மோதி விபத்துக்குள்ளானதில் 19 பேர் பலியாகினர்.

எகிப்தின் மினொபியா மாகாணம் அர்ப் அல் சன்பாசா கிராமத்திலிருந்து 22 தொழிலாளர்களை ஏற்றிக்கொண்டு நேற்று முன்தினம் காலை பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது.

இந்த பஸ் அஷ்மொன் என்ற பகுதியில் சென்றபோது வீதியில் எதிரே வேகமாக வந்த லொறி, பஸ் மீது மோதியது.

இந்தக் கோர விபத்தில் பஸ்ஸில் பயணித்த 19 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும், 3 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்கு ழுவினர் படுகாயமடைந்த வர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# ரஷ்யாவில் பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் மேற்கத்திய நாடுகள்

## ஜனாதிபதி புடின் விசனம்



மொஸ்கோ, ஜூன் 30

மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவில் பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கின்றன என்று ஜனாதிபதி விளாடிமிர் புடின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பெலாரஸில் நடைபெற்ற யூரேசியன் பொருளாதார ஒன்றிய உச்சி மாநாட்டில் பங்கேற்ற புடின், இடையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது மேற்கத்திய நாடுகள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை அடுக்கினார்.

அவர் கூறும்போது, "ரஷ்யாவுக்கு எதிராக செயல்படும் ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாதிகள் குறித்து யாரும் கவனிப்பதில்லை. மொஸ்கோவில் குண்டு வெடிப்பு போன்றவை இன்றும் நடக்கிறது. இதில் யாரும் கவனம் செலுத்த விரும்புவதில்லை. ரஷ்யாவுக்கு எதிரானது என்றால் அவர்களுக்கு எல்லாம் நல்லதாக தெரிகிறது" என சாடினார்.

மேலும் அவர், "எங்கள் நாட்டில் பிரிவினைவாதத்தை மேற்கத்திய நாடுகள் ஊக்குவித்த போதும், பயங்கரவாதம் போன்ற ரஷ்யாவுக்கு எதிரான போராட்டத்தின் ஒரு கருவியாகவும் இது நடந்தது. நேட்டோ விரிவாக்கம் மற்றும் உக்ரைன் பிரச்னையை தீர்ப்பது தொடர்பான வாக்குறுதிகளை நிறைவேற்றாததன் மூலம் மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவுக்கு மீண்டும் மீண்டும் துரோகம் இழைக்கின்றன" என்றும் குற்றஞ்சாட்டினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி அசத்தல் வெற்றி

## டெஸ்ட் தொடரை இழந்தது பங்களாதேஷ் அணி




கொழும்பு, ஜூன் 30

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இலங்கை அணி, டெஸ்ட் தொரை கைப்பற்றி அசத்தியது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் முதல் போட்டி சமனில் முடிந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொழும்பில் நடைபெற்றது.

பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 247 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் முதல் இன்னிங்ஸை ஆடிய இலங்கை அணி 116. 5 ஓவர்களில் 458 ஓட்டங்கள் குவித்தது. பதும் நிஸ்ஸங்க 158 ஓட்டங்களும், குசல் மெண்டிஸ் 84 ஓட்டங்களும் எடுத்தனர். பங்களாதேஷ் தரப்பில் சுழற்பந்து வீச்சாளர் தைஜுல் இஸ்லாம் 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.


பின்னர் 211 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி மளமளவென விக்கெட்களை இழந்து தடுமாறியது. 3ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் அந்த அணி 6 விக்கெட்களை இழந்து 115 ஓட்டங்கள் அடித்திருந்தது.

இந்தச் சூழலில் நேற்று முன்தினம் 4ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து துடுப்பெடுத்தா டிய பங்களாதேஷ் அணி மேற்கொண்டு 18 ஓட்டங்கள் அடித்த நிலையில் எஞ்சிய 4 விக்கெட்களையும் இழந்து 133 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அத்துடன் தொடரையும் 1-0 என்ற கணக்கில் இலங்கை கைப்பற்றி அசத்தியது.

பிரபாத் ஜெயசூர்யா 5 விக்கெட்கள் வீழ்த்தினார். ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை பதும் நிஸ்ஸங்க கைப்பற்றினார். (எ)

## முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி




பார்படாஸ், ஜூன் 30

முதல் டெஸ்ட் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணியை 159 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது.

மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 3 டெஸ்ட், 5 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் டெஸ்ட் கடந்த 25ஆம் திகதி பார்படாஸில் தொடங்கியது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 180 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதையடுத்து களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 190 ஓட்டங்கள் எடுத்தது.

இதனைத் தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸில் விளையாடிய அவுஸ்திரேலிய அணி 310 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் 301 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதையடுத்து களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி 141 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் மேற்கு இந்திய தீவுகள் அணியை 159 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. டிராவிஸ் ஹெட் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்கும் இடையேயான 2ஆவது டெஸ்ட் போட்டி ஜூலை 3ஆம் திகதி தொடங்குகிறது. (எ)

## ஹோம்பர்க் ஓபின் ரென்னிஸ்: ஜெசிகா பெகுலா சம்பியன்



ஹோம்பர்க், ஜூன் 30

ஹோம்பர்க் ஓபின் ரென்னிஸ் தொடரில் ஜெசிகா பெகுலா சம்பியனானார்.

பல முன்னணி வீராங்கனைகள் பங்கேற்ற ஹோம்பர்க் ஓபின் ரென்னிஸ் தொடர் ஜேர்மனியில் நடைபெற்றது. இதன் இறுதிப்போட்டியில் அமெரிக்க வீராங்கனையான ஜெசிகா பெகுலா, போலந்தின் இகா ஸ்வியாடெக் உடன் மோதினார். இதில் தொடக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜெசிகா பெகுலா 6 - 4 மற்றும் 7 - 5 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார். (எ)

## இனிமேல் தயவுசெய்து பல்டி அடிக்காதீர்கள்!

### ரிஷப்பிடம் அஸ்வின் கோரிக்கை


சென்னை, ஜூன் 30

டெஸ்ட் போட்டியில் சதமடித்தால் தயவுசெய்து பல்டி அடிக்காதீர்கள் என்று ரிஷப் பண்டுக்கு இந்திய அணியின் முன்னாள் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அஸ்வின் கூறுகையில், "ரிஷப் பண்டுக்கு ஒரு வேண்டுகோள். தயவுசெய்து பல்டி அடிக்காதீர்கள். ஏனெனில் டெஸ்ட் கிரிக்கெட் ஒன்றும் ஐ. பி. எல். கிடையாது. ஐ. பி. எல். போட்டியில் 50 - 60 பந்துகளுக்கு மேல் நீங்கள் விளையாட மாட்டீர்கள். ஆனால், டெஸ்ட் போட்டிகளில் அப்படி இல்லை. உங்கள் உடல் சோர்வடைந்துவிடும்"-என்று கூறினார். (எ)

அறிமுக போட்டியிலேயே

## உலக சாதனை படைத்த லுஹான் பிரிட்டோரியஸ்



புலவாயோ, ஜூன் 30

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அறிமுக போட்டியிலேயே தென்னாபிரிக்க வீரர் லுஹான் பிரிட்டோரியஸ் உலக சாதனை படைத்துள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி, சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி புலவாயோவில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்களை இழந்து 418 ஓட்டங்கள் குவித்தது. கார்பின் போஷ் 100 ஓட்டங்களுடனும் மபாகா 9 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இந்த போட்டியில் தென்னாபிரிக்க அணியில் அறிமுக வீரராக களமிறங்கிய 19 வயது லுஹான் பிரிட்டோரியஸ் 153 ஓட்டங்கள் குவித்து அசத்தினார். இதன் மூலம் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் குறைந்த வயதில் 150 ஓட்டங்கள் அடித்த வீரர் என்ற உலக சாதனையை படைத்துள்ளார். தற்போது அவருக்கு வயது 19 வருடம் 93 நாட்கள்.

இதற்கு முன்னர் பாகிஸ்தானின் ஜாவித் மியான்டட் 19 வருடம் 119 நாட்களில் அடித்திருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது அந்த சாதனையை முறியடித்துள்ள பிரிட்டோரியஸ் புதிய உலக சாதனை படைத்துள்ளார். (எ)


## இங்கிலாந்தை வீழ்த்தி இந்திய அணி வெற்றி

லண்டன், ஜூன் 30

97 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி இந்திய அணி வெற்றி பெற்றது.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய மகளிர் கிரிக்கெட் அணி 5 ரி - 20, 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் ரி - 20 ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 210 ஓட்டங்கள் குவித்தது. ஸ்மிருதி மந்தனா 112 ஓட்டங்கள் எடுத்தார்.

211 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து 14. 5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 113 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இதன் மூலம் இங்கிலாந்தை 97 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா அபார வெற்றி பெற்றது. இந்திய அணியின் சிரிஷணி 4 விக் கெட்களை வீழ்த்தினார். இரு அணிகளுக்கும் இடையேயான 2ஆவது ரி - 20 போட்டி நாளை முதலாம் திகதி நடைபெறவுள்ளது. (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்துப்பாத்தி...

நீதிமன்றிடம் விண்ணளப்பித்திருந்தார். இதற்கமைவாக வழங்கப்பட்ட அனுமதியின்பேரிலேயே இந்தப் பரிசோதனை முன்னெடுக்கப்படுகிறது.

இதனைவிட, யாழ்ப்பாண பல்கலைக்கழக இரசாயனவியல் பீட பேராசிரியர்களும் காபன் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேசமயம், இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி தற்போது மனிதப் புதைகுழி கண்டறியப்பட்ட இடத்துக்கு அருகிலும் பல மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்று அகழ்வுப் பணிகளை முன்னெடுத்து வரும் பேராசிரியர் ராஜ் சோமதேவ சந்தேகம் வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நேற்று...

அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் 22 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, செய்மதி படங்கள் ஊடாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் எதிர்வரும் நாட்களில் அகழ்வு பணிகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக அந்தப் பகுதிகளை துப்புரவு செய்யும் பணி முன்னெடுக்கப்படுகிறது.

இதேநேரம், அகழ்வு பணிக்காக ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவினத் தொகையாகக் கோரப்பட்டது என்றும் ஆனால், அதற்கு அண்மித்த தொகையே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இன்றைய தினமும் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போதை...

போதைப்பொருளை உடலில் செலுத்தி வந்துள்ளார். இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சுகயீனம் காரணமாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து அவர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும், அவர் வழியிலேயு உயிரிழந்தார்.

அவரின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ)

## கல்லுண்டாய்...

மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இதனிடையே, குப்பைமேட்டுக்கு தீ வைக்கப்படும் நாட்களில் அந்தப் பகுதியினர் அங்கு வசிக்கவே முடியாத நிலை ஏற்படுகிறது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு குப்பைமேடு தீயில் எரிந்தது. இதனால், மக்கள் இடம்பெயரும் நிலைமை ஏற்பட்டது. இந்த நிலையில், நேற்றைய தினம் யாழ். மாநகர சபை எல்லைக்குள் சேகரித்த கழிவுகளுடன் வாகனங்கள் அந்தப் பகுதிக்கு வந்தன.

இதன்போது, அந்த வாகனங்களை மக்களும் மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர்களும் வழிமறித்தனர். இதன்போது, மலக் கழிவை ஏற்றிவந்த வாகனம் ஒன்று அங்கிருந்து திரும்பிச் சென்றது.

ஏனைய வாகனங்கள் அங்கே நின்றிருந்த நிலையில் கொட்டப்படும் கழிவுகள் தொடர்பில் அந்த மக்களுக்கும் மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் அங்கு நின்றிருந்த யாழ். மாநகர சபையின் உறுப்பினர்களுக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டது.

இதன்போது, அங்கு நின்றிருந்த பொலிஸ் அதிகாரிகள் நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர முயன்றனர். எனினும், அங்கு தொடர்ந்து பதற்ற நிலைமை நிலவியது. இதைத் தொடர்ந்து அந்தப் பகுதி மக்கள் யாழ். மாநகர சபையினர் குப்பை கொட்டும் இடத்தை பார்வையிட்டனர். (ஐ)

## ஷிரந்தி...

செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமீபத்தில் இதையடுத்து, சமீபத்தில் மல்வத்து மகாநாயக்கரை சந்தித்தார். இதன்போது, அவர் "ஷிரந்தியை கைது செய்யும் நடவடிக்கையை எடுக்க வேண்டாம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் வலியுறுத்துமாறு", கேட்டார் என்று கூறப்படுகிறது.

எனினும், இதற்கு பதிலளித்த மல்வத்து மகாநாயக்கர் திப்போட்டுவாவே சிறீ சித்தார்த்த சுமங்கல தேரர், "கடந்த காலத்தில் ஊழல் செய்பவர்களைக் கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்திய நாங்கள் எப்படி ஜனாதிபதி அநுரவிடம் அப்படிச் சொல்ல முடியும்?" என்று கேட்டார் என்று கூறப்படுகிறது.

'சிரிலிய சவிய' கணக்கு தொடர்பில் நடத்தப்படும் புதிய விசாரணைகளின் அடிப்படையில், ஷிரந்தி ராஜபக்ஷ விரைவில் கைது செய்யப்படும் சாத்தியம் உள்ளது என்று கூறப்படுகிறது.

இதனிடையே, ஷிரந்தியின் சகோதரரும் சிறீ லங்கன் எயார் லைன்ஸின் முன்னாள் தலைவருமான நிஷாந்த விக்ரமசிங்க அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே, மகிந்த ராஜபக்ஷ மல்வத்து மகா நாயக்கரின் உதவியை நாடிருந்தார். ஆனால், அவர் இதில் தலையிட மறுத்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## வடக்கு...

இதன்போது, பின்வரும் தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.

உலக வங்கி மற்றும் மக்கள் சந்திப்புகளின் மூலம் இந்த அபிருத்தித் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டன. இதன்படி, வடக்கு மாகாணத்தில் 8 வலயங்களும் கிழக்கு மாகாணத்தில் 7 வலயங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில், யாழ். மாவட்டத்தில் 3 வலயங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 2 வலயங்களும் ஏனைய 3 மாவட்டங்களிலும் ஒவ்வொரு வலயங்களும் இனங்காணப்பட்டுள்ளன.

இதில் வடக்கு, கிழக்கு மாகாணத்தை இணைக்கும் கொக்கிளாய் பாலமும் முன்மொழிவாக உள்ளடக்கப்பட்டுள்ளது. உலக வங்கியால் விவசாயம், மீன்பிடி, சுற்றுலாத்துறை, தொழில்நுட்பம் ஆகிய 4 விடய பரப்புக்களின் கீழ் செயல்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்பதுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் முதல்கட்ட செயல்படுத்தலுக்காக 10 கோடி அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஒவ்வொரு மாவட்டங்களினதும் மாவட்ட செயலர்கள் தங்களது மேலதிக தேவைப்படுத்தல்களையும் முன்வைத்தனர். எதிர்காலத்தில் உலக வங்கியால் அவற்றை கவனத்திலெடுக்குமாறும் அவர்கள் கோரினர். உலக வங்கியின் செயல்திட்டத்தை தொய்வின்றி விரைவாக செயல்படுத்துவதற்காக இணைப்பு குழு ஒன்றும் முன்மொழியப்பட்டது. அந்தக் குழு அடுத்த கட்ட நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றைய கலந்துரையாடலில் உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி தலைமையிலான குழுவினருக்கும் அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, சுனில் ஹந்துன்நெத்தி, இ.சந்திரசேகரன், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், எஸ். சிறீபவானந்தராஜா, ஜெ. ரஜீவன், க. திலகநாதன், ம. ஜெகதீஸ்வரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கின் 5 மாவட்டங்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர். (ஐ-03/05)

# அரசு போர்த்திய ஜனநாயக போர்வை நீக்கப்பட்டுள்ளது

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்கும் செயல்பாடுகளில் இந்த அரசாங்கம் போர்த்தியுள்ள போர்வை நீக்கப்பட்டுள்ளது. தம்மை ஜனநாயகவாதிகள் எனக் கூறிக் கொள்பவர்கள் எவ்வாறு சர்வாதிகாரமாக ஆட்சியமைக்கின்றனர் என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று அவர் ஊடகங்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பொது நிதியைப் பயன்படுத்தி ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை நல்லாட்சி அரசாங்கமே முன்னெடுத்தது. அதற்கான தீர்ப்புகளே தற்போது கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

இது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. ஊழல், மோசடிகளில் ஈடுபட்டோருக்கு எதிராக யார் நடவடிக்கை எடுத்தாலும், அவர்களுக்கு எவ்வித பேதமும் இன்றி ஒத்துழைப்புகளை வழங்க நாம் தயாராக உள்ளோம்.



இவை மாத்திரமின்றி இதுவரையில் ஆரம்பிக்கப்படாமலுள்ள விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு உரிய தரப்பினரிடம் கேட்டுக் கொள்கிறோம். ஆனால், தற்போது அரச அதிகாரிகள் பலரும் அரசாங்கத்துக்கு சார்பாக செயல்பட்டு, ஜனநாயகத்தை மீறுகின்றனர். குறிப்பாக மேல் மாகாண ஆணையாளர் பகிரங்கமாக உள்ளூராட்சி மன்றங்களில் சர்வாதிகாரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்கும் செயல்பாடுகளில் இந்த அரசாங்கம் போர்த்தியுள்ள போர்வை நீக்கப்பட்டுள்ளது. தம்மை ஜனநாயகவாதிகள் எனக் கூறிக் கொள்பவர்கள் எவ்வாறு சர்வாதிகாரமாக ஆட்சியமைக்கின்றனர் என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஊழல், மோசடியாளர்கள் என தம்மால் விமர்சிக்கப்பட்டவர்களுடனேயே கூட்டணி அமைக்கும் நிலைமைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். வெலிகம பிரதேச சபையில் திட்டமிட்ட நாடகம் அரங்கேற்றப்பட்டிருக்கிறது. அங்கு எதிர்க்கட்சிகளுக்கு பெரும்பான்மை காணப்படுவதால் வாக்கெடுப்பை தாமதப்படுத்துவதற்காக இவ்வாறான நாடகம் அரங்கேற்றப்பட்டிருக்கிறது. அதிகார மோகம் அரசாங்கத்தை இந்த நிலைமைக்கு தள்ளியுள்ளது. இந்த அரசாங்கத்திடமிருந்து மக்கள் இதை எதிர்பார்க்கவில்லை - என்றார். (ஐ)

# 8 இந்திய மீனவர்கள் மன்னாரில் கைது!

மன்னார், ஜூன் 30

மன்னார் கடற்பரப்பில் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 8 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை நாட்டின் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட படகை கடற்படையினர் சோதனையிட்டனர். இதன்போது, குறித்த படகு விதிகளை மீறி எல்லை தாண்டி வந்தமை கண்டறியப்பட்டது. இதைத் தொடர்ந்து படகில் இருந்த 8 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைதான மீனவர்களுடன் கைப்பற்றப்பட்ட படகு தாழ்வுபாடு இறங்குதுறைக்கு கொண்டுவரப்பட்டது. கைதான மீனவர்கள் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தென்னிலங்கை...

முன்தினம் படகுகள் விபத்துக்கு உள்ளாகின.

தங்காலை - பரவிவெல்ல பகுதியில் கரை திரும்பிக் கொண்டிருந்த பல நாள் படகு கவிழ்ந்ததில் இருவர் காணாமல் போயினர். 4 பேர் டிங்கி படகின் உதவியுடன் மீட்கப்பட்டனர். இந்த நிலையில், காணாமல் போனவர்களை தேடும் பணியில் விமான படையினர் ஈடுபட்டிருந்தனர். இதில் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. மற்றவரை தேடும் பணி இடம்பெற்று வருகிறது.

இதேபோன்று, களுத்துறை - பேருவளை கடற்பரப்பில் கவிழந்த படகிலிருந்த சகோதரர்களின் உடல்கள் நேற்று காலை பெந்தோட்டை கடற்கரையில் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டன.

காலி தேவேந்திரமுனையில் படகு கவிழ்ந்த விபத்தில் அந்தப் படகில் பயணித்த நால்வரில் இருவர் உயிரிழந்தனர். இருவர் காப்பாற்றப்பட்டனர். ஒருவரை தேடும் பணி தொடர்கிறது. இதேநேரம், ஹிக்கடுவையில் படகு கவிழ்ந்தபோது 6 பேர் அதில் பயணித்திருந்தனர். எனினும், அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## அபாயகரமான...

மாநகர சபையினருடன் முரண் பாடும் ஏற்பட்டிருந்தது.

இதன் பின்னர், கழிவுகள் கொட்டப்பட்ட இடத்தை மக்கள் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டது. இதன்போது, அங்கு தரம் பிரிக்கப்படாமல் குப்பைகளும் மருத்துவ கழிவுகள் ஆபத்தான விதத்தில் கொட்டப்பட் டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. (ஐ)

## 3 வாரங்களில்...

பரீட்சை இந்த ஆண்டின் ஆரம்பத் தில் நடைபெற்றது. இந்தப் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

இதனிடையே, சாதாரண தர பரீட்சை திகதியை அறிவிக்கும் சமீபத்தைய சமூக ஊடக அறிக்கைகள் தவறானவை என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ஐ)

## அலை...

இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபர், நேற்று அதிகாலை படகுகளை கழுவிக் கொண்டிருந்தார். அப்போது அலையின் தாக்கத்தால் படகு ஒன்று அவர்மீது கவிழ்ந்தது. படகின் அடியில் சிக்கிய அவர் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மதியம் அவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அணுசக்தி கதிர்வீச்சின் தாக்கத்தை கண்டறிய கண்காணிப்பு கட்டமைப்பு

## நெடுந்தீவு, மன்னார், மட்டக்களப்பில் அமையும்

கொழும்பு, ஜூன் 30

**அணுசக்தி விபத்தின்போது நாட்டுக்கு ஏற்படும் கதிர்வீச்சு விளைவுகளை கண்காணிக்கக்கூடிய முற்கூட்டிய எச்சரிக்கை கட்டமைப்பை நிறுவ அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது.**

அணுசக்தி முகவர் நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தின் கீழ் நெடுந்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கற்பிட்டி ஆகிய பகுதிகளில் கண்காணிப்பு கட்டமைப்புகள் நிறுவப்படவுள்ளன என்று இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் ஆய்வு மற்றும் அமுலாக்க பிரிவின் பணிப்பாளர் பிரகீத் கடதுன்ன தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள கடற்படை முகாம்களை கேந்திரமாக கொண்டு இந்த 5 இடங்களில் இந்த அமைப்புகள் நிறுவப்படவுள்ளன. இந்த கட்டமைப்பின் ஊடாக நாட்டுக்கு அருகிலுள்ள நாடுகளில் உள்ள அணுசக்தி நிலையங்களில் ஏற்படும் இயற்கையான அல்லது செயற்கை விபத்துகளின்போது நாட்டுக்குள் வரும் கதிர்வீச்சை அவதானிக்க முடியும் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 1,350 கிலோ பீடி இலைகளுடன் 2 படகுகள் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, ஜூன் 30

புத்தளம் - கற்பிட்டியில் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட ஆயிரத்து 350 கிலோ பீடி இலைகளுடன் 2 படகுகள் கைப்பற்றப்பட்டன.

இந்தியாவிலிருந்து கடத்திவரப்படடு மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இந்தப் படகுகள் கைப்பற்றப்பட்டன என்று கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இவற்றைக் கடத்தி வந்த சந்தேக நபர்களை கைது செய்ய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# “மகிந்த, கோட்டாபயவின் வழியில் அநுரகுமாரவும் நடக்கின்றார்!”

கொழும்பு, ஜூன் 30

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் கலாநிதி ஹர்ஷன சூரிய பெரும நிதியமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளமை தவறானதோர் எடுத்துக்காட்டு. அரச நிர்வாக சேவையிலும் இலங்கை மத்திய வங்கியிலும் இந்தப் பதவிக்கு தகுதியற்றவர்கள் எவரும் இல்லையா? மகிந்த, கோட்டாபயவை போன்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் நிதி, பாதுகாப்பு அமைச்சுக்கு அரசியல் நியமனங்களை வழங்கியுள்ளார் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஹர்ஷன சூரியபெரும நிதியமைச்சின் செயலாளராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். இதேபோல் நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் மகிந்த சிறிவர்தன ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர்நிலை பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார். இந்த இரு செயல்பாடுகளும் மிக மோசமான எடுத்துக்காட்டாகும்.

நாட்டின் நிதியமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் ஆளுநர், பிரதம நீதியரசர், சட்டமா அதிபர் உள்ளிட்ட பிரபல்யமான நாட்டுக்கு நேரடியாக செலுத்தும் பதவிகளை வகித்தவர்கள் ஓய்வுப்பெற்ற பின்னர் அவர்களுக்கு உயர் பதவிகள் வழங்கப்படுமாயின் சேவைக் காலத்தின்போது அவர்கள் சுயாதீனமாக செயல்படுவதற்கு பாதிப்பு ஏற்படும்.

பிரதான அமைச்சுகளான நிதி, வலுசக்தி,மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள், மத்திய வங்கியின் ஆளுநர், பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், உள்ளிட்ட பதவிகளை வகித்தோருக்கு கவர்ச்சிகரமான ஓய்வூதிய கொடுப்பனவு மற்றும் உயர் சலுகைகளை வழங்கி, அவர்கள் வெளிநாடுகளிலோ அல்லது தேசிய மட்டத்திலோ உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதை தடுக்க வேண்டும். இதற்கான சட்டத்தை உருவாக்க வேண்டும்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது நிதியமைச்சு, இலங்கை மத்திய வங்கி தொடர்பில் பாரதூரமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. பொருளாதார நிபுணர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் இலங்கை வங்குரோத்து நிலையை அடைய போகிறது என்பதை முன்கூட்டியதாக அறிவிக்கவில்லை. ஜனாதிபதியின் வசம்தான் நிதியமைச்சு உள்ளது. தனக்கு இணக்கமாகவரையே ஜனாதிபதி நிதியமைச்சின் செயலாளராக நியமிப்பார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் வசம், பாதுகாப்பு மற்றும் நிதி பொருளாதார அமைச்சுக்கள் உள்ளன. இந்த அமைச்சில் 94 நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் உள்ளன. இந்த நிறுவனத்தின் செயல்பாடுகளை ஜனாதிபதியால் அமைச்சர் என்ற அடிப்படையில் கண்காணிக்கவோ அல்லது ஆராயவோ முடியாது. ஆகவே, பூரணத்துவமித்த வகையில் நிதி அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் - என்றும் அவர் வலியுறுத்தினார். (ஐ)

தன்பாலின உறவு விவகாரம்:

# வோல்கர் டர்க்கின் கருத்தை நீதி அமைச்சர் மறுக்கிறார்!



கொழும்பு, ஜூன் 30

தன் பாலின உறவுகளை குற்றமற்றதாக அறிவிக்கும் யோசனை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் வெளியிட்ட கருத்தை நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார மறுத்துள்ளார்.

தன்பாலின திருமணங்களை குற்றமற்றதாக அறிவிக்கும் ஒரு யோசனை தற்போது இலங்கை பாராளுமன்றத்தில் உள்ளது என்றும் அதனைப் பரிசீலிக்கும் நிலையில் இருப்பதாகவும் இலங்கைக்கான பயணத்தின் இறுதி நாளில் நடத்திய ஊடக சந்திப்பில் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் கூறியிருந்தார். தாம் அதனை வரவேற்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, உயர்ஸ்தானிகர் குறிப்பிட்ட யோசனை நாடாளுமன்றத்தில் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், அதுபற்றி எந்தவொரு தீர்மானமும் முன்வைக்கப்படவில்லை எனவும் நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார தெளிவுபடுத்தியுள்ளார். (ஐ)

# பராட்டே சட்ட சலுகைக்காலம் இன்று நள்ளிரவுடன் நிறைவு!

கொழும்பு, ஜூன் 30

பராட்டே சட்ட சலுகைக் காலம் இன்று திங்கட்கிழமை நள்ளிரவு முதல் இரத்து செய்யப்படவுள்ளது. இதன்கீழ், பல தொழிலதிபர்களின் சொத்துகள் வங்கிகளின் உடைமை ஆக்கப்படலாம் என்று சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் அரசாங்கம் தலையிட்டு, இந்த தொழிலதிபர்கள் தங்கள் கடன்களை செலுத்த சலுகை காலத்தை வழங்க வேண்டும் என்றும் அந்த சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# பகிடிவதையால் மாணவன் மரணம்: விசாரணை குழுவின் அறிக்கை விரைவில்!

கொழும்பு, ஜூன் 30

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படும் 3 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதி கொண்ட இரண்டு சொகுசு வாகனங்களை களுத்துறை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் பிரபல அரசியல்வாதி ஒருவரின் நெருங்கிய உறவினருக்கு இந்த வாகனங்கள் சொந்தமானவை என்று கண்டறியப்பட்டுள்ளது.

மொன்டெரோ வகை ஜீப், கேரவன் வகை வான் ஆகியவையே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. மேல் மாகாண புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்த வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட வானில் பொருத்தப்பட்டுள்ள பதிவு இலக்கம் ஹொரணை மில்லனிய பகுதியில் உள்ள மற்றொரு வாகனத்துக்கு சொந்தமானது. அது சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்டது என்றும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட ஜீப் வாகனத்தில் உள்ள பதிவு இலக்கம் மோட்டார் வாகன திணைக்களத்தின் கணினி முறைமையில் தரவுகளை மாற்றி தயாரிக்கப்பட்டது எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கதிகாமத்துக்கு பாத யாத்திரை சென்றவர் மயங்கி விழுந்து பலி

கதிர்காமம், ஜூன் 30

கதிர்காமம் ஆலயத்துக்கு பாத யாத்திரை சென்ற பக்தர்களில் ஒருவர் திடீரென விழுந்து உயிரிழந்தார்.

புத்தளம் - உடப்பு கிராமத்தை சேர்ந்த எஸ். பொன்னம்பலம்( வயது 52) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த மே முதலாம் திகதி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் ஆரம்பமான பாத யாத்திரையில் பங்கேற்றவர் என்று பாதயாத்திரை குழுவின் தலைவர் ஜெயா வேல்சாமி தெரிவித்தார். அவர் பாதயாத்திரை செல்வது மூன்றாவது தடவை ஆகும்.

அவர் கதிர்காமத்தை சென்றடைந்த நிலையில், அவரின் குடும்பத்தினரும் பேருந்து மூலம் கதிர்காமத்தை சென்றடைந்துள்ளனர். இதைத் தொடர்ந்து அவர், குடும்பமாக ஆலயத்துக்கு சென்று கொண்டிருந்தார். அப்போதே, திடீரென மயங்கி விழுந்தார்.

மயங்கி விழுந்தவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட இரு சொகுசு வாகனங்கள் சிக்கின!

கொழும்பு, ஜூன் 31

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீட மாணவரின் மரணம் தொடர்பாக விசாரணை செய்ய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட ஐவர் குழு இந்த வாரம் தனது அறிக்கையை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த அறிக்கையை இறுதிப்படுத்துவதற்கு முன்னதாக மேலும் சில மாணவர்களிடம் இருந்து வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்படும் என்றும் விசாரணைக் குழு தெரிவித்துள்ளது. அறிக்கை தயாரிக்கப்பட்டவுடன், அது சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரிடம் சமர்ப்பிக்கப்படும்.

விசாரணையின்போது மாணவர்கள் மற்றும் பிறரிடம் இருந்து 110 மணி நேரத்துக்கும் மேல் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பகிடிவதை காரணமாக கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீட மாணவர் உயிர் மாய்த்துக்கொண்டார். இது தொடர்பில் 11 மாணவர்கள் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org